
www.padippakam.com

செப்டம்பர், 1997 ரூ. 5/-

எழுச்சி

# தலித் முரசு

- அடக்கப்பட்ட மக்களின் சமுகநீதி திங்களிதழ் -



புரட்சிப் பாடகர் கத்தருடன்
ஒரு நேர்காணல்

## சாதியும், தீண்டாமையும் இனவெறியே...!

- சிறப்புக் கட்டுரை -

படிப்பகம்

www.padippakam.com



# தேவை - பொறுப்பான ஆட்சி !



ஒடுக்கப்பட்டோர் எனப்படுவோர் தனித்ததொரு வகுப்பினராவர். அவர்கள் இசுலாமியர்களோடு சேர்த்து எண்ணத் தக்கவர்கள் அல்லர்; வேறுபட்டவர்கள். அவர்கள் இந்துக்கள் என இணைத்துப் பேசப்பட்டாலும், எந்த வகையிலும் இந்துச் சமுதாயக் கட்டுக்கோப்பிற்குள் இடம் பெற்றவர்கள் அல்லர். அவர்கள் தனித்ததொரு வாழ்க்கை முறையைக் கொண்டிருப்பதோடு, இந்திய நாட்டில் உள்ள பிற சமூக மக்கள் பெற்றுள்ள வாழ்க்கை நிலையிலிருந்தும் – பெரிதும் வேறுபட்ட நச்சுத் தன்மையான நிலையில் வைக்கப்பட்டுள்ளவர்கள்.

இந்தியாவில் தாழ்வான, கீழ்நிலையில் உள்ள சமூகத்தினர் சிலர் உள்ளனர். ஆனால், ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நிலைமை இதனினும் முற்றிலும் மாறுபட்டது. அடிமைக்கும், கொத்தடிமைக்கும் இடைப்பட்டதொரு நிலையிலேயே இந்த மக்கள் உள்ளனர். இந்த வேறுபாட்டுடன், இழிவாழ்வினராக இவர்கள் வைக்கப்பட்டுள்ளனர் என்று கொள்ளலாம். அடிமையும், கொத்தடிமையும்கூட பிறரோடு கலந்து பழக முடியும். அந்த உரிமைகூட இவர்களுக்குக் கிடையாது.

தீண்டாமையின் காரணமாக, இவர்கள் பிறரோடு கலந்துறவாட முடியாதபடி, விதிக்கப்பட்டுள்ள தடையும் – திணிக்கப்பட்ட அடிமை நிலையும், பொதுவாழ்வில் வாய்ப்பு வசதிகளைப் பிறரைப் போலச் சமமாக அனுபவிக்க முடியாமல் செய்திருக்கின்றன. நடைமுறையில் கட்டாயமாக அனைத்துச் சமவாய்ப்புகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டு, அதனால் அவர்கள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைக் குடியுரிமையும்கூட கிடைக்கப் பெறாத படுமோசமான நிலையில் உள்ளனர்.

ஒடுக்கப்பட்ட மக்கள், தங்கள் பிரச்சினைகள் காலப்போக்கில் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து – எந்த மாற்றத்தையும் காணாதவர்களாக உள்ளனர். இம்மக்களுக்கு அரசியல் அதிகார உரிமை அளிப்பது பற்றி எவரும் சிறிதளவும் சிந்தித்ததில்லை. இந்த நிலையை, இனிமேலும் நாங்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுவேன். எங்கள் பிரச்சினை – பொது அரசியல் பிரச்சினையாகக் கருதித் தீர்க்கப்பட வேண்டும்.

இன்றைக்கு எங்கள் ஆதரவைப் பெற்று அதிகார பீடத்தையும், கவுரவத்தையும் அடைபவர்கள் – ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற பிறகு எங்கள் சமூகப் பிரச்சினையை எளிதாகத் தீர்ப்பதால் – அவர்களுக்கு அதனால் ஆதாயம் எதுவும் ஏற்படப்போவதில்லை; இழப்பே ஏற்படும். அந்தச் சூழ்நிலையில் எங்கள் சிக்கலைத் தீர்க்கவில்லை என்பதற்காக, அவர்களைப் பதவியிலிருந்து இறக்குவதற்கு – இன்னொரு புரட்சியை நாங்கள் நடத்த வேண்டியதாயிருக்கும். மிகவும் நம்பிக்கைக்குரிய ஒரு பாதுகாப்பை நம்பி அழிந்து போவதைவிட, மிகவும் அய்யத்திற்குரிய அச்சங்களை எழுப்பி வசவுகளைப் பெறுவதையே நாங்கள் விரும்புகின்றோம்.

எனவே, எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய உறுதிமொழி – எங்களுக்கும் ஒரு பிடிப்பு இருக்கும் வகையில், இந்திய ஆட்சியை இயக்கவல்ல அரசியல் அமைப்பு முறைகளிலேயே இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். இந்திய ஆட்சி அமைப்பை நடத்துவதற்குக் கட்டுப்பாடற்ற அதிகாரம் பெற்றுவிடக் கூடியவர்களான – எங்கள் நலன்களுக்கு எதிரானவர்களின் விருப்பத்திற்குரிய முறையில், எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண விட்டுவிட முடியாது.

இப்போதைக்கு நான் சொல்ல விரும்புவது எல்லாம், ஒரு பொறுப்பான ஆட்சியையே நாங்கள் கேட்கின்றோம்; வெறும் முதலாளிகள் மாற்றமாக அமைந்த அரசாங்கத்தை அல்ல என்பதுதான். நீங்கள் உருவாக்கப்போகும் நிர்வாக அமைப்பு, முழுமையான பொறுப்பு மிக்கதாக அமைய வேண்டுமானால் – அமைய இருக்கும் சட்ட மன்றம் உண்மையில், முழுமையான பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

*– நவம்பர் 20, 1930ஆம் ஆண்டு, வட்டமேசை மாநாட்டின் முதன்மைக் கூட்டத்தில்.*



படிப்பகம்

www.padippakam.com



# மக்கள் கொண்டாடினார்களா ?

கடந்த ஆகஸ்ட் 15 அன்று, இந்தியாவின் 50ஆம் ஆண்டு 'சுதந்திர பொன்விழா', மிகுந்த ஆரவாரத்துடன் கொண்டாடப்பட்டது. மக்கள் தொடர்பு அமைப்புகளும் அவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தன; இதற்கு இவர்களின் வணிக நலன் ஒரு முக்கிய காரணமாகும். இந்த நாட்டின் அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள், பள்ளிக் கூடங்கள், 'தேசிய' இயக்கங்கள் போன்றவை இந்நாளை மிகவும் விமரிசையாகக் கொண்டாடின. தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், திராவிட இயக்கங்கள் – கட்சிகள் 'சுதந்திர' நாளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஆனால், தி.மு.க. அரசு ஆட்சியில் அமர்ந்திருப்பதால், இக்கொண்டாட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டது.

ஆனால், இம்மாபெரும் நிகழ்வை மக்கள் கொண்டாடினார்களா? இப்பொழுது இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் – பொன்விழா தொடர் கொண்டாட்டங்கள்கூட, அரசு சார்பில் நடத்தப்படுபவையே ஒழிய மக்கள் தாமாக முன்வந்து கொண்டாடும் விழாக்கள் அல்லவே! அரசியல் கட்சித் தலைவர்கள், திரைப்பட நடிக–நடிகைகளின் பிறந்த நாட்கள் எல்லாம்கூட மக்களால் கொண்டாடப்படுகின்றது. ஆனால், ஒரு நாட்டின் சுதந்திர நாள் – அந்நாட்டு மக்களால் கொண்டாடப்படவில்லை எனில், அதன் பொருள் என்ன? இந்நாட்டின் விடுதலைக்கும், இந்நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கும் – ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்பதுதான் காரணம்.

ஏனெனில், இந்தியா என்ற பூகோள எல்லை மட்டும்தான் விடுதலை பெற்றுள்ளது. ஆனால், இந்நாட்டின் கோடானுகோடி மக்கள், இன்றளவும் விடுதலை பெறவில்லை என்பதுதான் அடிப்படை உண்மை நிலை! வெறும் ஆட்சி மாற்றம் எப்படி சுதந்திரமாகும்? இந்தியாவின் சுதந்திரம் என்பது, மண்ணுக்கான சுதந்திரம் மட்டுமே – மக்களுக்கான சுதந்திரமல்ல! மேம்போக்காகப் பார்த்தால், மண்ணுக்கான சுதந்திரம் என்பது மக்களுக்கான சுதந்திரமாகப்படலாம். ஆனால், இந்தியாவின் நிலை அப்படி இல்லை. இங்கு, ஆதிக்கவாதி இந்தியனாகவே தன்னை அடையாளப்படுத்திக் கொள்கின்றான். அனைத்து அழிக்கும் ஆரியம், மதம் என்ற வடிவில் தன்னை உருவகப்படுத்திக் கொண்டுள்ளது. எனவே, பெரும்பான்மை மக்கள் இங்கு சாதிக் கொடுமைகளால் படிநிலைப்படுத்தப்பட்டு அல்லலுறுகின்றனர்.

இன்றைக்கு இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள், தாழ்த்தப்பட்டவர்களாக, பிற்படுத்தப்பட்டவர்களாக, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாகத் தானே அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். நாட்டின் மக்கள் தொகையில், சரிபாதி பெண்களுக்கு இன்றளவும் சுதந்திரம் இல்லை. இந்நாட்டின் நான்கில் ஒரு பங்கு வகிக்கும் தலித் மக்கள், மனிதனாகக்கூட கருதப்படவில்லை. இந்தியாவின் 50 ஆண்டு சுதந்திரம் இன்னும் சுடுகாட்டில்கூட சமத்துவத்தினை உண்டாக்கவில்லையே!

இக்கொடுமைகளை எல்லாம், அரசு விழாக்கள் / கொண்டாட்டங்கள் மூலம் மறைத்துவிட முடியாது. சமத்துவம் இல்லாத சுதந்திரம் எப்படி உண்மை சுதந்திரமாகும்? சாதி ஒழிக்கப்படும்போது, அதன் ஆதிக்கம் உடைபடும் போதுதான் – உண்மையான சுதந்திரம் கிட்டும். அப்போதுதான் மக்கள் தாமாக முன்வந்து சுதந்திர நாளைக் கொண்டாடுவார்கள். 'தேசிய திலகங்கள்' இனியாவது இதைப் புரிந்து கொள்ளட்டும்.

கிடைக்காத சுதந்திரத்தை கிடைத்ததாகக் கூறுவது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளவே பயன்படும். இந்த நாட்டின் 'சுதந்திரத்தை' நடுநிலையில் இருந்து, சீர்தூக்கிப் பார்த்தல் அவசியம். சாதி ஒழிக்கப்படும்போதுதான் – சாதியின் பேரால் மட்டுமே பறிக்கப்பட்டுள்ள அடிப்படை வாழ்வியல் உரிமைகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும்; சாதியின் பேரால் ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகள் வேரோடு பிடுங்கி எறியப்படும்போதுதான் – மக்கள் விடுதலை பெற்றதாகக் கொள்ள முடியும். மக்களுக்கான சுதந்திரம் என்பது, சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ●

ஆசிரியர், வெளியிடுபவர்
பெ. சந்திரசேகசன்

பொறுப்பாசிரியர்
புனித பாண்டியன்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 50/–

நூலக / நிறுவனக் கட்டணம் : ரூ. 100/–

'தலித் முரசு' – விளம்பரக் கட்டணம்

அரைப் பக்கம் : ரூ. 500/–
முழுப் பக்கம் : ரூ.1000/–
அட்டை பின்புறம் : ரூ. 2000/–

முகவரி :

6, 97வது தெரு, 15வது செக்டர்
கே.கே. நகர், சென்னை – 78.
✆ : 483 07 68



படிப்பகம்

www.padippakam.com

ஃ பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும், தலித் மக்களுக்கு எதிரான தாக்குதல்களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இந்நிகழ்வுகள், உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பை சீர்குலைக்கின்றன. இத்தீமைகளை எல்லாம் களைய – தேசிய அளவில் இயக்கம் தேவை.

*– டாக்டர். கே.ஆர். நாராயணன், குடியரசுத் தலைவர், 14.8.97 அன்று நள்ளிரவு 'சுதந்திர' நாள் பொன் விழா வையொட்டி – நாடாளுமன்ற அவைக ளின் கூட்டுக் கூட்டத்தில்.*

ஃ சமூகக் கொடுமைகளை வேரோடு களையாமல் – நாடு முன்னேற முடியாது. சமூக ஒற்றுமைக்காக நாட்டின் மூலை முடுக்கெல் லாம், இயக்கம் பரவியாக வேண்டும்.

*– அய்.கே. குஜ்ரால், பிரதமர், தில் லியில் நடைபெற்ற நற்சிந்தனைக் கூட் டத்தில் உரை நிகழ்த்தும்போது.*

ஃ நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடக்கும்போது, ஒவ்வொரு நிமிடத்திற்கும் ரூ.7 ஆயிரம் செலவாகின்றது. இதனை நம்நாடு தாங்காது.

*– பி.ஏ. சங்மா, நாடாளுமன்ற மக்களவைத் தலைவர், நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரில்.*

ஃ கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியினருக்கு, அரசு இனி ரூ. 20,000/– நிதி உதவி வழங்கும். கலப்புத் திருமணத் தம்பதிகளில் – மணமகளோ, மண மகனோ தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந் தவராக இருத்தல் வேண்டும்.

*– மு. கருணாநிதி, முதலமைச்சர், மதுரையில் 31.8.97அன்று நடைபெற்ற 'தீண்டாமை ஒழிப்பு' மாநாட்டில்.*

ஃ காஷ்மீருக்கு தன்னாட்சி உரி மை வழங்குவதால், காஷ்மீர் மக்களை மேலும் நெருக்கமாக ஒருங்கிணைக்க வழி ஏற்படும். இம்மாநில மக்களின் விருப்பங்களை நிறை வேற்றும் வாய்ப்பாகவும் அது அமையும்.

*– டாக்டர். பாரூக் அப்துல்லா, ஜம்மு – காஷ்மீர் முதலமைச்சர், இந்திய 'சுதந்திர' பொன்விழாவன்று அளித்த செய்தியில்.*

ஃ மய்ய, மாநில அரசுப் பணிகளில் – தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட காலி இடங்கள் அனைத்தையும் நிரப்ப வேண்டும்.

*– இந்திய ஜனநாயக மாதர் சங் கம், 23.8.97 அன்று 'தீண்டாமை ஒழிப்புக் கருத்தரங்கில்' நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தில்.*

# வாக்குமூலம்

ஃ மத ரீதியில் நாட்டைப் பிளவு படுத்த பாரதிய ஜனதா முயற்சிக்கின்றது. எந்த மதத்தினருக்கும் நாடு சொந்தமில்லை. இந்து, முஸ்லிம், சீக்கியர், தலித், கிறித்தவர் மற்றும் இதர சமுதாயத்தினருக்கும் நாடு சொந்த மானது.

*– ராம்விலாஸ் பாஸ்வான், ரயில் வே அமைச்சர், ஆமதாபாத்தில் உரை யாற்றியபோது.*

ஃ பெண்கள் பிரச்சினைகளுக்கு, நாடாளுமன்றத்தில் போதிய முக்கியத்துவம் கிடைக்கவில்லை.

*– நஜ்மா எப்துல்லா, மாநிலங்க ளவைத் துணைத் தலைவர், மாநிலங்கள வைச் சிறப்புக் கூட்டத் தொடரின்போது.*



அளப்பரிய
தொண்டாற்றிய ...
அன்னை தெரசா
அவர்களின்
மனித நேயப் பணிக்கு
ஈடு இணை
ஏதுமில்லை!
அன்னைக்கு நமது
ஆழ்ந்த இரங்கல்.

ஃ தமிழக மீனவர்கள் மீது இலங்கை ராணுவ 'எலிகாப்டர்கள்' அண்மையில் தாக்குதல் நடத்தியுள்ளன. 1993–லிருந்து இதுவரை இலங்கை ராணுவத்தின் தாக்குதல் காரணமாக – 375 தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

*– அகில இந்திய மீனவர் சங்கத் தலைவர்கள், 16.8.97 நாளிட்ட 'தின மணி'யில்.*

ஃ பெண்களுக்கு, அய்க்கிய நாடுகள் அவையின் தீர்மானத்திற்கு ஏற்ப பெண்ணிய நீதி வழங்கப்பட வேண்டும். இது, இயல்பான வாழ்க்கை முறையாக மாற்றப்பட வேண்டும். பெண் குழந்தைகள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

*– மக்களவை உறுப்பினர்கள், இந்தியாவிற்கான குறைந்த அளவு செயல் திட்டத் தீர்மானத்தில்.*

ஃ எந்த வடிவிலும் மணிப்பூர் மாநி லத்திற்குள் இந்தி மொழி நுழையக் கூடாது. இந்தித் திரைப்படங்களோ, இந்தி நாளிதழ் களோ – மணிப்பூர் மாநிலத்திற்குள் நுழைந் தால் அவற்றைத் தீயிட்டுக் கொளுத்துவோம்.

*– மணிப்பூர் மாணவர்களின் புதிய போராட்ட அறிவிப்பு.*

ஃ சமூகத்திலும், பொருளாதாரத்தி லும் பின்தங்கியவர்களாக – ஏழைகளாக, தினக் கூலிகளாக அன்றாடங் காய்ச்சிகளாக, அரசியல் செல்வாக்கு அற்றவர்களாக – தாழ்த் தப்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கும் இவர்களைத்தான் காவலர்கள் அடிக்கடி சீண்டுவது வழக்கமாகிவிட்டது.

*– எம்.ஏ. சேவியர், 'கவலை தரும் காவல் மரணங்கள்' என்ற கட்டுரையில். 'தினமணி', 2.9.97.*

**"எங்க கிராமத்துல எல்லாமே – ஜாதி அடிப்படையில்தான். சுதந்திரம் கெடச்சு 50 வருடமாகியும் இன்னும் தீண் டாமை இருக்குது. கீழ்சாதி ஆளு தொட் டுட்டாங்கன்னு, ஜனங்க பாத்திரத்த கழு வுறாங்க, வீட்டைக் கழுவுறாங்க."**

*– நிகேஷ் மேவதா, போபால் அருகே உள்ள பிஜோரி கிராமத்தில் வசிக்கும் 8வது படிக்கும் மாணவன், 'இந்தியா டுடே' (3.9.97) இதழில்.* ●



படிப்பகம்

www.padippakam.com



# சாதியும், தீண்டாமையும் இன வெறியே...!

## உலக அரங்கில் இந்திய அரசின் இரட்டை வேடம் கலைகின்றது

ரவி நாயர்

இனப்பாகுபாட்டு ஒழிப்பு பற்றிய உலக ஒப்பந்தம், 21.12.1965 அன்று, 'அய்.நா. பொதுப்பேரவையில்' தீர்மானம் 2106 (அ) (20)-ன் படி ஏற்றுக் கொள்ளப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்து - தீவிரமாகப் பிரச்சாரம் செய்த நாடுகளில் ஒன்றான இந்தியா, இவ்வொப்பந்தத்தை - 1968ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் நாள் உறுதிப்படுத்தியது. இவ்வொப்பந்தத்தின் 19-வது பிரிவின்படி, 1969 ஆம் ஆண்டு சனவரி 4ஆம் நாள் இது நடைமுறைக்கு வந்தது.

இவ்வொப்பந்தத்தின் 9ஆம் பிரிவின் படி, இந்திய அரசு அவ்வப்போது - இந்தியாவில் இனப்பாகுபாடு பற்றிய தனது அறிக்கைகளை அளிக்கக் கடமைப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தியா அது குறித்த சில அறிக்கைகளை அளித்துள்ளது. இந்தியாவில், இனவெறி குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆய்வின்மையாலும், தகவல்களை "மறைமுகமாகவும், ரகசியமாகவும்" இந்திய அரசு வைத்திருப்பதால், இந்தியாவில் நிலவும் இனப்பாகுபாடு பற்றிய இந்திய அரசின் நிலைப்பாட்டை - எவரும் அறிய இயலாமல் போய்விட்டது. ஆனால், தென்னாப்பிரிக்காவிலும், மேற்கத்திய நாடுகளிலும் நிலவும் இனவேறுபாடுகளை, இந்திய அரசு கண்டிக்கின்றது.

1986 முதல் 1996 வரையிலான பத்தாண்டுகளை உள்ளடக்கிய முதல் 14-வது அறிக்கையை 1996ஆம் ஆண்டு இந்திய அரசு, 'உலக இனப்பாகுபாட்டு ஒழிப்புக் குழுவிடம்' அளித்துள்ளது. பிரச்சனைகளை இக்குழு ஆழமாக அலசி ஆராய உதவும் வகையில், 'தெற்காசிய மனித உரிமை ஆவண மய்யம்' மாற்று அறிக்கை ஒன்றை அளித்தது. அறிக்கையை அளிப்பதில் அரசின் தாமதம் ஒரு புறமிருக்க, அரசு அளித்த அறிக்கையோ மிகமிகச் சுருக்கமாக இருந்தது வேதனைக்குரிய ஒன்று.

இனப்பாகுபாட்டு ஒழிப்பு பற்றிய உலக ஒப்பந்தத்தில், 1968 டிசம்பர் 31ஆம் நாள் இந்திய அரசு கையெழுத்திட்டு உறுதிப்படுத்திய தன் மூலம், இந்தியாவில் இனவெறியையும், இனப்பாகுபாட்டையும் ஒழித்துக் கட்டும் பணியில், தன்னை அர்ப்பணித்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அளிக்கப்பட வேண்டிய இவ்வறிக்கை, 1986 முதல் 1996 வரை அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1996 ஆகஸ்டில், இனப்பாகுபாட்டு ஒழிப்புக் குழுவிடம் அளிக்கப்பட்ட அறிக்கை, பத்தாண்டுக்கான அறிக்கைத் தொகுப்பாகும். பத்தாண்டுகளாக அறிக்கை அளிக்கப்படாததற்குப் பெரிய காரணங்கள் ஏதும் சொல்லப்படவில்லை. அதுமட்டுமல்ல, இந்திய அரசு உலகக் குழுவிடம் 1996இல் அளித்த இந்த அறிக்கையோ, வெறும் ஒன்பது பக்க அளவிலான - மிகமிகச் சுருக்கமான ஒன்று என்பது வேதனை தரக்கூடியது.

இந்த ஒப்பந்தத்தின் முதல் பிரிவு, இந்தியச் சூழலுக்குப் பொருத்தமற்றது என்பதையே - அறிக்கையின் பாதிக்கும் மேற்பட்ட பக்கங்கள் விவாதிக்கின்றன. மீதியுள்ள பக்கங்களோ, இனப்பாகுபாட்டைத் தடுப்பதற்கான இந்தியச் சட்டங்களைப்பற்றிய விளக்கவுரையாகவே அமைந்துள்ளன. ஏட்டளவில் நின்றுபோன பெரும்பாலான சட்டங்களுக்கும், எதார்த்த நடைமுறைகளுக்கும் உள்ள மிகப் பெரும் இடைவெளி பற்றி, அறிக்கையின் எந்தப் பகுதியிலும் ஒரு சிறு குறிப்பு கூட இல்லை.

இம்மாற்று அறிக்கையை அளிப்பதன் மூலம், இந்தியாவில்

*இந்தியாவின் சாதி - தீண்டாமைக் கொடுமைகள், உலக அரங்கில் எதிரொலிக்காததற்குக் காரணம் - இக்கொடிய பிரச்சினை, ஒரு இனவெறிப் பிரச்சினையாக உலகிற்கு எடுத்துச் சொல்லப்படவில்லை. தென்னாப்பிரிக்கா, இலங்கை போன்ற நாடுகளில் நடைபெறும் இனப்படுகொலைகளுக்கு - உலக அரங்கில் அளிக்கப்படும் முக்கியத்துவம், இந்தியாவில் இதைவிடக் கொடுமையாக - அதுவும் பிறப்பின் அடிப்படையிலேயே பேதத்தை ஏற்படுத்தும், சாதி - தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பிற நாடுகள் எவ்விதக் கவலையும் கொள்ளாததற்குக் காரணம் என்ன?*

*இந்தியாவின் உயர்சாதி ஆளும் வர்க்கம், இப்படியொரு சாதி-இனப் பிரச்சினை, இம்மண்ணில் நிலவுவதையே உலக அரங்கில் இருட்டடிப்புச் செய்துவிடுவதுதான் இதற்கான அடிப்படைக் காரணமாகும். இது, எவ்வளவு பெரிய கொடுமை! **அகிம்சையை விரும்பும் ஆளும் வர்க்கத்தின் 'அகிம்சா வன்முறை' இதுதானோ?!***

*ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள், உலக அரங்கில் பேசப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்தியா மீது பல்வேறு நெருக்கடிகள் இயல்பாகவே தோன்றும்; இம்மக்களின் அவலக் குரல்களுக்குத் தீர்வு கிடைக்க வழிவகை உண்டாகும். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, டெல்லியில் உள்ள 'தெற்காசிய மனித உரிமை ஆவண மய்யம்', உலக இனப்பாகுபாட்டு ஒழிப்புக் குழுவிடம் - இந்திய அரசு அளித்துள்ள அறிக்கையின் குறைபாடுகளை அலசி ஆய்வு செய்து, மாற்று அறிக்கை ஒன்றை அளித்துள்ளது.*

*1. இனப்பாகுபாட்டு ஒழிப்பு பற்றிய உலக ஒப்பந்தம். 2. இந்திய அரசு அளித்த அறிக்கை 3. இந்திய அரசின் அறிக்கைகள் மீதான உலக இனப்பாகுபாட்டு ஒழிப்புக் குழுவின் பார்வைகள் 4. தெற்காசிய மனித உரிமை ஆவண மய்யம் அளித்த மாற்று அறிக்கை என அனைத்தையும் மொழிபெயர்த்து, **'பீப்பிள்ஸ் வாட்ச்'** அமைப்பு, **'சாதியமும் இனவேறுபாடே!'** என்ற நூலாக வெளியிட்டு அரும்பணி புரிந்துள்ளது.*

*- பொறுப்பாசிரியர்*



படிப்பகம்

www.padippakam.com

இனவெறி மற்றும் இனப்பாகுபாடு பற்றிய ஒரு விவாதத்தை - தேசிய அளவிலும், உலக அளவிலும் உருவாக்க - 'தெற்காசிய மனித உரிமை ஆவண மய்யம்' முயற்சிக்கின்றது. உண்மையே இறுதியில் நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அரசு அளித்துள்ள அறிக்கை, முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. "இந்தியாவில் இனவேற்றுமை பற்றிய புரிதலுக்கான" அவசியம் இருப்பதாக இவ்வறிக்கை ஒரு புறம் கூறுகின்றது. ஆனால் மறுபுறம், "மரபின இனக்குழு அல்லது தேசிய இனத் தோன்றல்களின் வெளிப்படையான தனித்தன்மைகள் இல்லாத இனக்கலவையே இந்தியா" என்றும் குறிப்பிடுகின்றது.

பிற இனங்களோடு அல்லது இனக்குழுக்களோடு கலக்காத ஓர் இனமோ, சமூகமோ, இனக்குழுவோ இவ்வுலகில் இல்லை. மற்ற இனங்களிடமிருந்தோ, இனக் குழுக்களிடமிருந்தோ - பண்பாட்டு குணங்களை ஈர்த்துக் கொள்ளாத ஓர் இனமோ, சமூகமோ இல்லை. இதனால், "மரபின அல்லது தேசிய இனக்குழுக்களின்" தனித்தன்மைகள் முழுமையாக மறைந்துவிட்டன என்று பொருளல்ல. நாம் எவ்வளவு தான் விரும்பினாலும் அவ்வாறு நடப்பதில்லை.

இந்திய அரசின் அறிக்கை குறிப்பிடுகின்ற "மரபின, இனக்குழு அல்லது தேசிய இனவழித் தோன்றல்களின் வெளிப்படையான தனித்தன்மைகள்", ஆரிய இனத்தூய்மைக்கான தேடலைத்தான் சுட்டிக்காட்டுகின்றது. இந்தியாவில் பல்வேறு இனங்கள் ஒன்றோடொன்று கலந்துவிட்டன என்பது உண்மையாயினும், பழங்குடியினர் இக்கலவையில் ஒரு பகுதியினர் என்பதற்கான சான்றுகள் மிகக்குறைவே. இந்தோ-ஆரியர்களைப் போலல்லாது, இந்தியாவில் வாழும் பழங்குடியினரும், பிற தேசிய இனக்குழுக்களும் தங்களது இனத்தூய்மைக்குச் சொந்தம் கொண்டாடுவதில்லை. இருப்பினும், இந்நாள்வரை பாதுகாத்து வருகின்ற தங்களது தனித்த இன அடையாளங்களுக்கான அங்கீகாரத்தை இவை தேடுகின்றன.

இந்தியாவில், பல்வேறுபட்ட இனங்களும் இனக்குழுக்களும் உள்ளன. விடுதலைக்குப் பின், இந்தியாவின் பல பகுதிகளில் - இனவழி முனைப்புகள் தொடர்ந்த அம்சமாகவே இருந்து வருகின்றன. இருந்தாலும், தனித்த இனங்கள் இங்கு இல்லை என்றும், பல்வேறு இனங்களை உள்ளடக்கிய ஒரு உருகும் பானையே (Melting Pot) இந்தியா என்றும், பல்வேறு அய்நா. தளங்களில் இந்திய அரசு உறுதியாகக் கூறி வருகின்றது.

---

**இந்தியாவில், இனப் பாகுபாடு (தீண்டாமை) தொடர்பான எந்த ஒரு விவாதத்தையும் இந்திய அரசு தவிர்த்து வருகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரையில், இனப் பாகுபாடு என்பது, தென் ஆப்பிரிக்காவில் மட்டுமோ, பிஜிதீவுகளில் மட்டுமோ அல்லது மேற்கத்திய நாடுகளில் மட்டுமோ நிலவும் ஒரு பிரச்சனையாகும். இந்தியாவில் இனப்பாகுபாடு, பரந்துபட்ட அளவில் இருக்கின்றது; எனினும், இதனை முடிவுக்குக் கொண்டுவர – ஒருங்கிணைந்த முயற்சியை இந்திய அரசு இது வரை எடுக்கவில்லை.**

---

பல்வேறு இனங்கள், நிறங்கள், இனக்குழுத் தோன்றல்கள் போன்றவற்றின் இருத்தலை, இந்திய அரசு மறுப்பதைப் புரிந்து கொள்ள, இந்து மதத்தின் தன்வயப்படுத்தும் அல்லது உட்செரித்துக் கொள்ளும் தன்மையைப் புரிந்து கொள்வது அவசியம். ஒரு மத சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என்ற முனைப்பை இந்தியா கொண்டிருந்தாலும், வெகு மக்கள் சிந்தனைகளையும், பார்வைகளையும் உருவாக்குவதில் இந்து மதம் முக்கிய பங்காற்றுகின்றது என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவில் அதிக அளவில் இசுலாமியர்களும், கிறித்தவர்களும், உள்ளனர். ஒடுக்குகின்ற இந்து சாதிய அமைப்பிலிருந்துத் தப்பிக்க, பெரும்பான்மை தாழ்த்தப்பட்ட இந்துக்கள், இசுலாம் மற்றும் கிறித்தவ மதங்களுக்கு மாறினர். இவை சமத்துவ மதங்களாகத் தென்பட்டாலும், பெரும்பாலான மதம் மாறியவர்கள், அதே சாதிய அமைப்பைத்தான் இன்றும் பின்பற்றுகின்றனர். அதிலும், முக்கியமாக அவர்களது சிந்தனையையும், பார்வைகளையும் இந்து மதத்தின் தாக்கமே தீர்மானிக்கின்றது.

உள்ளிழுத்தல்தான், இந்து மதத்தின் அடிப்படை. ஆரியர்கள் இங்கு வந்தபோது மக்கள், அரச வம்சத்தினர் அல்லது போர்வீரர்கள், மதவாதிகள், பொதுமக்கள் என்று மூன்று சமூகக்குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அப்போது சாதிய உணர்வு இல்லை; ஒரே குழுவிற்குள்ளே மட்டும்தான் திருமணம் செய்ய வேண்டும் என்ற வரையறை இல்லை; தொழில்கள் பாரம்பரிய ரீதியானதாக இல்லை. ஆனால், ஆரிய மேலாதிக்கம் எப்போது முழுமையானதோ, அப்போது தங்களது இனத்தூய்மையையும், மேலாண்மையையும் பாதுகாக்க - ஆரியர்கள் சாதிய அமைப்புகளை உருவாக்கி, பூர்வீகக் குடிமக்களை சமூக - சமய தளத்திற்குப் புறம்பே தள்ளி, திருமணம் போன்ற சமூக உறவுகளைத் தடை செய்தனர்.

ஆரியர்களுக்கும், பூர்வீகக் குடிமக்களுக்கும் இடையேயான கலப்பு - வெறுப்புக்குரிய ஒன்றாகக் கருதப்பட்டது. இந்தக் கலப்பின் மூலம் பிறந்தவர்களை தாசர்கள் (அடிமைகள்) என்று அழைத்தனர். இந்தத் தாசர்கள், வேதச் சடங்குகளில் பங்கெடுக்கத் தடை விதிக்கப்பட்டனர். இருப்பினும், பரந்துபட்ட இந்து சமய கருத்தமைவினுள்ளே அவர்களது தெய்வங்களை வழிபட அனுமதிக்கின்றனர். இருப்பினும், ஒவ்வொரு புதுக் குழுவையும் சாதிய அமைப்பால் - உள்ளிழுத்துக் கொண்ட ஆரியர்கள் அந்தக் குழுவிற்கும் - வேலையின் அடிப்படையில் ஒரு இடம் ஒதுக்கித்தந்து,


படிப்பகம்

www.padippakam.com

அகன்ற இந்து மதத்திற்குள் படிப் படியாக அவர்களையும் இணைத் துக் கொண்டனர்.

'கல்வி ஆய்வு மற்றும் பயிற் சிக்கான இந்திய தேசியக் குழுவின்' (NCERT) பாடநூல்களும், இந்தியா வில் பள்ளிகளுக்குப் பாடநூல்கள் தயாரித்து வழங்குகிற - அரசுக் கட் டுப்பாட்டில் உள்ள பாடநூல் நிறுவனமும், ஆரியப்படையெடுப் பை உறுதி செய்கின்றன. இந்த ஆரியர்களின் (ஆரியர்கள் என்றால் உயர் குடிப்பிறப்பாளர் என்று பொ ருளாம்!) படையெடுப்புக்கு முன் பாக இங்கு பலர் இருந்திருக்கின் றனர். அவர்கள் "அனாரியர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர். இனவெறியும், மேலாண்மையும் கொண்ட ஆரியர்கள், தங்களையும் அவர்களையும் வேறுபடுத்து கின்றனர்.

எனவே, இனப்பாகுபாட்டு ஒழிப்புக்கான - உலக ஒப்பந்தத்தின் முதல்விதி இந்தியாவிற்குப் பொருந் தும். நிற, இன அடையாளங்கள், உடல் அமைப்பு போன்ற தெளி வான வேறுபாடுகளைக் கொண்ட - பல்வேறுபட்ட இனக்குழுக்கள் இந்தியாவில் உள்ளன. ஆனால், இந்த வேறுபாட்டை இந்திய அரசு மறுக்கின்றது.

பரிந்துரை :

**இந்தியாவில் இன்று நிலவும் இனவெறி, இனப்பாகுபாடு, இன வெறுப்பு, சகிப்பின்மை போன்ற வற்றின் நிகழ்கால வடிவங்களைக் கண்டு, இது குறித்து அறிக்கை தயா ரித்திட — இந்தியாவுக்கு வருமாறு ஆணையத்தின் சிறப்புத் தொடர் பாளருக்கு இந்திய அரசு அழைப்பு விடுக்க வேண்டும்.**

"குற்றம் புரிவோரைத் தண் டிக்கவோ, பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கவோ அரசுக்கும், அரசு எந்திரங்களுக்கும் போதுமான வழி முறைகள் இல்லாமல் இல்லை. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங் குடியினரின் ஜனநாயக உரிமை களையும், அவர்களது மாண்பையும் பாதுகாக்க - அரசியலமைப்புச் சட் டம் பிரிவு 17-ன்படி, தீண்டாமை என்பது ஒரு குற்றம் என்று நமது குடியரசு உருவானபோதே வகை செய்யப்பட்டுள்ளது. சாதீய ரீதி யான குற்றங்களுக்கு, மரண தண்ட னை வழங்கும் அளவுக்கு தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் - 1989இல் இடம் உள்ளன. இருப்பி னும், இவை அனைத்தும் ஏட்டள வில் தான் இருக்கின்றன. இந்த சட்டத் தீர்வுகளை நடைமுறைப் படுத்தத் தேவையான உறுதிப்பாடு இல்லை". 60 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட நாடாளு மன்றக் குழு, 1991ஆம் ஆண்டு செப்



ரவி நாயர்

டம்பர் மாதம் 13ஆம் நாள், அப்போ தைய இந்திய குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமனிடம் கொடுத்த மனுவில் இடம் பெற்ற வார்த்தைகள் இவை. அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள், இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இனஒழிப்புக்கான உலகக் குழுவிடம், இந்திய அரசு அளித்த அறிக்கை - இனம், நிறம், இனக்குழு போன்றவற்றின் அடிப்படையி லான பாகுபாட்டைத் தடுக்கும் பல் வேறு அரசியல் சாசன வழிமுறை களைப் பற்றி விரிவாகப் பேசுகின் றது. ஆனால், மேற்கண்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறிக்கையோ, சட்டப்பூர்வ வார்த் தைப் பூச்சுகளுக்கும் எதார்த்தங் களுக்கும் இடையேயுள்ள அகல மான இடைவெளியைக் கோடிட் டுக் காட்டுகின்றது. இந்த சட்டத் தீர்வுகளை நடைமுறைப்படுத் துவதில் எழும் தடைகளை, இந்திய அரசு அலசி ஆராய்வதில்லை.

**சட்டரீதியான தீர்வுகள் இல் லை என்பதல்ல பிரச்சனை; இந்தச் சட்டத்தீர்வுகளை நடைமுறைப் படுத்துவதுதான் பிரச்சனையே.**

பழங்குடியினரின் சமூக - பொருளியல் சூழலைக் கணக்கில் கொள்ளாது, போர்க்குணம் வாய்ந்த இவர்களை அடக்கி ஆள்வதற்காக ஆங்கிலேய அரசு, 1871-ல் குற்றவியல் பழங்குடியினர் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தனர். இதன்படி, பீகா ரில் வாழும் கஞ்சுருக்கள் அல்லது காங்கர்கள், நர்மதா பள்ளத்தாக்குப் பகுதியில் வசிக்கும் பழங்குடியின ரும் இன்னும் பல பிரிவினரும் - குற்றவாளிகளாகவே கருதப்பட் டனர்.

வயது வந்த அனைத்து ஆண் களும் வாரம் ஒருமுறை காவல் நிலையம் சென்று கையெழுத்திட வேண்டும். இந்திய அரசு, இந் தச்சட்டத்தை ஏன் இன்னும் ஆதரிக் கின்றது என்பதுதான் இன்றைய கேள்வி. ஒரு சில திருத்தங்கள் வந்திருந்தாலும், சட்டத்தின் சாரம் இன்றும் அப்படியேதான் இருக் கின்றது. இச்சட்டம், இனவெறி உடையதாக உள்ளது. இது, "அனைத்து மக்களும் சமமாகவும், சுதந்திரமாகவும் பிறக்கின்றார்கள்" என்ற நாகரீகமடைந்த சமூகத்தின் குரலை நெறிப்பதாகவே உள்ளது.

பரிந்துரை :

**1871-ல் கொண்டு வரப்பட்ட குற்றவியல் பழங்குடியினர் சட்டத் தை நீக்க வேண்டும்.**

தீண்டாமை - இனஒதுக்க லைப் போன்றதே! வருணத்தின் (நிறத்தின்) அடிப்படையில், இது மக்களைப் பிரிக்கின்றது. சமூகரீதி யாக தாழ்த்தி, பொருளியல் ரீதியாக ஒன்றுமில்லாமல் ஆக்குகின்ற, இந்த



படிப்பகம்

www.padippakam.com

தீண்டாமைப் பாரம்பரியம் - பரவலான பாகுபாட்டிற்கும், மனித உரிமை மீறல்களுக்கும் அங்கீகாரம் வழங்குகின்றது. ஆனால், இனப் பாகுபாடு என்று அதனைக் குறிப்பிடாது, சாதிய அமைப்பு என்று இந்திய அரசு குறிப்பிடுகின்றது.

பரிந்துரை :

**சிவில் உரிமைச் சட்டம் மற்றும் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகியுள்ள வழக்குகளின் எண்ணிக்கையையும், விசாரணையில் எத்தனை பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்த தகவல்களையும் அரசு, குழுவிற்கு வழங்கிட வேண்டும்.**

“மனிதாபிமானமற்ற, காட்டுமிராண்டித்தனமான முறையில், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் - சொந்த நாட்டு மக்களாலேயே தாக்கப்படுவது ஒரு அவமானமான துன்பமாகும். பல நேரங்களில், இப்பெண்கள் தெருக்களில் நிர்வாணமாக நடக்க வைக்கப்படுகின்றனர். அவர்களது குழந்தைகள், மிருகங்களைப் போல வெட்டிக் கொல்லப்படுகின்றனர். அவர்களிடம் உள்ள - கொஞ்சநஞ்ச வாழ்வாதாரங்களும் தீவைத்துக் கொளுத்தப்படுகின்றன. இக்கொடுமைகளையெல்லாம், அரசும் - அரசு எந்திரங்களும் அமைதியாய் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன; அல்லது கண்டு கொள்ளாமல் அலட்சியமாய் இருக்கின்றன; அல்லது இதுபோன்ற கொடுமைகளை நிகழ்த்துவோருடன் கைகோர்த்து கூட்டாளியாகவே இணைந்து நிற்கின்றன என்பது வேதனையான ஒன்று,” என 1991 செப்டம்பர் 13ஆம் நாள் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமனிடம் 60 தலித் நாடாளுமன்றக்குழு அளித்த அறிக்கை மிகுந்த வேதனையோடு குறிப்பிடுகின்றது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, பண்டைய இந்தியாவில் பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரன் என்று பிரித்து - சாதிக்கு அடித்தளமிட்ட மநு, விட்டுச் சென்ற பரம்பரைச் சொத்துதான் - இன்று தலித் மீதான தாக்குதல்கள். கால ஓட்டத்தில், பார்ப்பனர்கள் தங்களது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டனர். சாதியம் இன்றும் ஒரு சமூகத் தீங்காக மட்டுமின்றி, இந்தியாவின் ‘சாபக்கேடாகவே’ உள்ளது.

ஆனால், சாதியத்தை முறியடிக்கவோ, இனப்பாகுபாட்டு வடிவங்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கோ - இந்திய அரசு, தொடர்ச்சியான - முறையான முயற்சிகள் ஏதும் எடுக்கவில்லை. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில், இந்து வலது சாரிக்கட்சியான பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்திருக்கும் சூழலில், இனவெறி திடீரென்று அதிகரித்துள்ளது.

---

**தீண்டாமை என்ற நடைமுறை, முழுமையாக ஒழிக்கப்பட்டு விட்டதாக இந்திய அரசு அறிக்கையில் கூறுகின்றது. ஆனால், நாட்டின் பல இடங்களிலும் தீண்டாமை இன்றளவும் நடைமுறையில் உள்ளது என்பதில் சந்தேகமே இல்லை. தீண்டாமைக் கொடுமைகள் குறித்து, போதுமான அளவு பத்திரிகைகளில் வெளிவந்தும்கூட இது பற்றி இந்திய அரசு அமைதி காக்கின்றது. மேலும், இந்தியாவில் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டதாகக்கூறி, உலக நாடுகளை நம்ப வைக்க முயற்சிக்கின்றது.**

---

மத்திய பிரதேசத்தில், ஆரம்பப்பள்ளி பாடநூல்கள், பழங்குடியினரை ராட்சசர்களின் வாரிசுகளாகவே சித்தரிக்கின்றன. முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. பூட்டா சிங் - முன்னாள் பிரதமர், திரு. நரசிம்மராவுக்கு 1992, பிப்ரவரி 11ம் நாள் எழுதிய கடிதத்தில், “ஒரு பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீது தொடுக்கப்படும் வன்முறைகளை, சட்டப்படி விசாரணை செய்யாது விட்டுவிடுவது, பிற பகுதிகளில் சமூக விரோத சக்திகள் ஊக்கம் பெறவும், இதுபோன்ற குற்றங்கள் பெருகிடவும் வழிவகுத்திடும். ஒரு பகுதியில் வாழும் பாதிக்கப்பட்ட தலித் படும் துன்பம், பிற பகுதிகளில் வாழும் தலித் மக்களிடையே ஒரு விதமான நடுக்கத்தையும், பய உணர்வையும் ஏற்படுத்தி, அவர்களிடம் பாதுகாப்பற்றத் தன்மையை உருவாக்கிவிட்டு, தங்களுக்கு என்ன நடந்தாலும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டு, ‘விதி’ வசமே தங்களை ஒப்படைத்து விடும் நிலைக்கு ஆளாக்கிவிடும்” என்று குறிப்பிடுகின்றார்.

பரிந்துரை :

**சாதியத்தின் அனைத்து வடிவங்களுக்கும் எதிரான பிரச்சாரத்தின் மூலம் — சாதியத்தை ஒழித்திட முடியும். சாதியத்திற்கு எதிரான பிரச்சாரத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை இந்திய அரசு ஒதுக்கிட வேண்டும்.** ●

---

*இக்கட்டுரையாளர், ‘தெற்காசிய மனித உரிமை ஆவண மய்யத்தின்’ நிர்வாக இயக்குனர். இந்திய அரசின் மனித உரிமை மீறல்களை, உலக அரங்கில் தொடர்ந்து எடுத்துரைத்து வரும் மனித உரிமை ஆர்வலர்.*


தங்கள் பகுதிகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை, ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்குத் தெரிவியுங்கள்.

**South Asia Human Rights Documentation Centre**
C-16/2, DDA Flats
Saket, New Delhi - 110 017
Phone : 91-11-6859622 / 6865736



**‘சாதியமும் இனவேறுபாடே!’**

விலை : ரூ. 25/– பக்கம் : 156

வெளியீடு : ‘பீப்பிள்ஸ் வாட்ச்’
7, பி.டி. ராசன் சாலை
இரண்டாவது தெரு,
மதுரை – 625 002.

நூல் கிடைக்குமிடம் :
இந்திய தேசிய சமூக
செயல்பாட்டு இயக்கம்
17, கச்சேரி சாலை, சென்னை – 4.




படிப்பகம்

www.padippakam.com



# வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும்

"தமிழ் நாட்டில், சாதிக் கலவரங்களைத் தடுக்க வன்கொடுமைத் தடுப்புப் சட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும்" என்று தமிழ்நாடு தலித் சேனா தலைவர் பெ. சந்திரசேகேசன் தூத்துக்குடி – வேப்பலோடையில், செய்தியாளர்களிடையே அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்:



தலித் சேனா அமைப்பு 1983 இல் இப்போதைய ரயில்வே அமைச்சர் மாண்புமிகு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்களால் துவங்கப்பட்டது. நாட்டின் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்கு - சமூக, பொருளாதார, அரசியல் மேம்பாடு கிடைக்க நாங்கள் பாடுபட்டு வருகின்றோம். இது ஒரு அரசியல் சார்பற்ற அமைப்பாகும்.

சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, ஏழை மக்களுக்குத் தரமான கல்வி, வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. உபரி நிலங்கள், கோவில் நிலங்கள் ஆகியவற்றை தலித் மக்களுக்கு பிரித்துக் கொடுக்க, சட்டத்தில் இடம் உள்ளது. ஆனால், இவைகளைப் பெற, மக்கள் போராட்டம் நடத்த வேண்டிய நிலை உள்ளது.

சுதந்திரப் பொன்விழா கொண்டாடும் இந்த நேரத்தில், வன்கொடுமைகள் தலை தூக்குகின்றன. இவற்றைத் தடுக்க, 1989-ம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதை தமிழக அரசு முழுமையாக செயல்படுத்தினால், சாதிக் கலவரங்களைத் தடுக்கலாம்! அதேபோல, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவது பற்றி 1995-ல் ஒரு சட்டம், இயற்றப்பட்டுள்ளது. ஆனால் அந்த சட்டமும் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை.

14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு - இலவச கட்டாய கல்வி வழங்க சட்டம் உள்ளது. ஆனால், கல்வி, தனியார் மயமாக்கப்பட்டு வரும் இந்த நேரத்தில் - ஏழைகளுக்கு எட்டாத பொருளாதார கல்வி உள்ளது.

மண்டல்குழு பரிந்துரைகள் அடிப்படையில், 69 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தீவிரமாக செயல்படுத்த அரசு சட்டம் கொண்டு வர வேண்டும்.

மாண்புமிகு. மு. கருணாநிதி அவர்களின் அரசு, பதவி விலக வேண்டும் என்று டாக்டர் கிருஷ்ணசாமி கூறினார். அவர் கருத்துப்படி பார்த்தால், கருணாநிதி அரசை நீக்கிவிட்டு - கொடியங்குளம் சம்பவத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஜெயலலிதாவை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்று கிருஷ்ணசாமி, விரும்புகிறாரா?

தேவேந்திரர், ஆதி திராவிடர், அருந்ததியர் என்ற பெயர்களை விட்டு விட்டு 'தலித்' என்று ஒரே சொல்லால் இவர்களை அழைக்க வேண்டும் என்று நானே நேராக டாக்டர். கிருஷ்ணசாமியிடம் வற்புறுத்தினேன். ஆனால், அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். 1931லேயே தாழ்த்தப்பட்டவர்களை 'தலித்' என்று அரசு ஒப்புக் கொண்டிருக்கின்றது.

சமூக அமைப்புக்களில் தலித் மக்கள், பிற்படுத்தப்பட்டவர், சிறுபான்மையினர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரே அமைப்பு 'தலித் சேனா' மட்டுமே. ●

**சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, ஏழை மக்களுக்குத் தரமான கல்வி, வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. உபரி நிலங்கள், கோவில் நிலங்கள் ஆகியவற்றை தலித் மக்களுக்கு பிரித்துக் கொடுக்க, சட்டத்தில் இடம் உள்ளது. ஆனால், இவைகளைப் பெற, மக்கள் போராட்டம் நடத்த வேண்டிய நிலை உள்ளது.**



படிப்பகம்

www.padippakam.com



# தொடரும் தலித் சேனா கருத்தரங்குகள்...

**தலித் சேனா கருத்தரங்கம், 27.8.97 புதன்கிழமை மாலை 3 மணியளவில் சேலம் மாவட்டம் ஒய்.எம்.சி.ஏ மண்டபத்தில், மாவட்டத் தலைவர் திரு. எ. தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது.**

இக்கருத்தரங்கில், மாநிலத் தலைவர் திரு. பெ. சந்திரகேசன் அவர்கள் சிறப்பு அழைப்பினராகக் கலந்துக் கொண்டார். மாநிலத் துணைத் தலைவர் திரு. ஆர். ஜோன்ஸ், மாநிலப் பொருளாளர் திரு. என். ஆறுமுகம், பொதுச் செயலாளர்கள் திரு. பி. ஆனந்தன், திரு. ஆர்.கே. சுவாமிநாதன், திரு. ஆர். சுந்தரமூர்த்தி, மாநிலத் துணைச் செயலாளர் திரு. குப்புசாமி, தலித் சேனா பிரமுகர் திரு. எ. சேதுராமன், திரு. டி. தாமரைக்கண்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

சேலம் மாவட்ட பொதுச் செயலாளர் திரு. எ. சண்முகம் வரவேற்புரை நல்க, மாவட்ட அமைப்பாளர் திரு. எ. சுந்தரம் மற்றும் மாவட்டத் துணைத் தலைவர் திரு. ஆர். துரைசாமி முன்னிலை வகித்தனர். மேலும், ஆத்தூர் ஒன்றியத் தலைவர் திரு. கே. மணி, ஒன்றியச் செயலாளர் திரு. எம்.பி.மாரியப்பன், வாழப்பாடி ஒன்றியத் தலைவர் திரு. டி. சுப்பிரமணியன், மேலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த திரு. பெரியசாமி ஆகியோர் உரையாற்றினர். பத்து ஒன்றியங்களைச் சேர்ந்த சுமார் 300 பிரதிநிதிகள் கருத்தரங்கிற்கு வருகை தந்திருந்தனர். குறிப்பிடத் தகுந்த எண்ணிக்கையில், பெண்கள் கலந்து கொண்டனர். சேலம் இணைச் செயலாளர் திரு. கே. சேகர் நன்றி கூறினார். ●



## தூத்துக்குடி – தலித் சேனா கிளை துவக்கவிழா

இந்தியாவின் தென் கடைக் கோடிப் பகுதி தூத்துக்குடி மாவட்டம், வேப்பலோடை நடராசபுரத்தில், தலித் சேனா கிளை துவக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில், பெரியவர் பம்பையா, டாக்டர். அம்பேத்கர், தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் ஆகியோர் உருவப்படத் திறப்பு டாக்டர் அம்பேத்கர் நினைவு அவை, அறிவு வழி நூலகம் திறப்பு மற்றும் சுவடுகள் புகைப்படக் கண்காட்சி துவக்கம் ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

இவ்விழாவில், . பெரியவர் பம்பையா உருவப் படத்தைத் திறந்து வைத்து, தமிழ்நாடு தலித் சேனா தலைவர் திரு. பெ. சந்திரகேசன் உரையாற்றுகையில், "தலித்சேனா என்கின்ற அகில இந்திய அமைப்பு - ஒரு அரசியல் கட்சி அல்ல; உங்களிடம் வாக்கு கேட்டு வரப்போகும் அமைப்பும் அல்ல; இது ஒரு சமூக நீதிக்கான அமைப்பே ஆகும். சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் நேரு, முதல் அய்ந்தாண்டுத் திட்டத்தை செயல்படுத்தியவுடன், நம் நாட்டில் 'பாலாறும் தேனாறும் ஓடும்' என்று கூறினார். இன்று, ஏறக்குறைய 50 ஆண்டுகள் கழித்து நம் நாட்டில் பாலாறும், தேனாறும் எங்கே ஓடுகின்றது?

சுதந்திர நாள் பொன் விழாவைக் கொண்டாடும் வேளையில், டாக்டர். அம்பேத்கர் வரைந்த இந்திய அரசியல் சட்டம் விதி 45, நாட்டில் உள்ள 14 வயதுக்குட்பட்டவர்கள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டும் என்றிருந்தும், நாட்டில் பெரும்பான்மை ஏழை - எளிய தலித், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குறைந்த அளவு கல்விகூட வழங்கப்படவில்லை. வேலை வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. குடிசையில் குடியிருக்கக்கூட நிலம் இல்லை என்ற வேதனையான நிலை இருக்கின்றது. உபரி, புறம்போக்கு. கோவில் நிலங்களை, நிலமில்லாத ஏழை - எளிய தலித் மக்களுக்கு அளிக்க வேண்டும்" என்று அரசிற்கு அறிவுறுத்தினார்.

மாநில பொதுச்செயலாளர் (கல்வி) ராவணதாஸ், மாநில பொதுச் செயலாளர் (நிலம்) திரு. பி. ஆனந்தன் ஆகிய இருவரும் முறையே டாக்டர். அம்பேத்கர், தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் ஆகியோரின் திருவுருவ படங்களைத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்கள்.

அறிவு வழி நூலகத்தைத் திறந்து வைத்துப் பேசிய மாநில கொள்கைப் பரப்புச் செயலாளர் திரு. இ. அன்பன், "ஒவ்வொரு தாயும் தனது வீரமிக்க, துணிவுமிக்க, லட்சியமிக்க கதைகளை - தாலாட்டாகப்பாடி, தங்கள் குழந்தைகளை வளர்க்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

"சுவடுகள்" கண் காட்சியைத் துவக்கி வைத்துப் பேசிய மாநில இளைஞரணிச் செயலாளர் மு. பழனிமுத்து, படிக்கும் - படித்த - படிக்கப் போகும் இளைஞர்கள், தான் அதிகம் படித்து விட்டோம் என்றும், தனக்கு வேலை கிடைக்கவில்லை என்று விரக்தி அடையாமல், யாரையும் எதிர் பார்க்காமல், தன்னை ஈன்றெடுத்த பெற்றோருக்கு, கிராமத்திற்கு, சமூகத்திற்கு மற்றும் உலகத்திற்கு ஏதாவது ஒரு, ஆக்கப் பூர்வமான முறையில் முடிந்தவரையில் தொண்டு செய்ய முன் வர வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்.

திரு. எம். சத்தியசீலன், திரு. சம்பத் வெல்கம், நெல்லை மாவட்டத் தலைவர் திரு. லட்சுமணன் மதுரை மாவட்டப் பொருளாளர் திரு. பெருமாள், திரு. பழனிச்சாமி மற்றும் பலர் உரையாற்றினர். இந்நிகழ்ச்சிகளை, திரு. மு.பா. எழிலரசு ஒருங்கிணைத்தார். ●

– நம் செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com



# தொடரட்டும் தூய்மைப் பணி...

இந்திய 'சுதந்திர பொன் விழாவைக்' குறிக்கும் வகையில், அனைத்து ரயில் நிலையங்களிலும் தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென, தலித் சேனா நிர்வாகிகளை, அகில இந்திய தலித் சேனா தலைவரும், மய்ய ரயில்வே அமைச்சருமான திரு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இதற்கிணங்க 6.8.97 நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில், தூய்மைப் பணி - தலித் சேனா தமிழ்நாடு



தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தூய்மைப் பணியில் கலந்து கொண்ட திருவாளர்கள் : ஆர். ஜோன்ஸ், பி. ஆனந்தன், என். ஆறுமுகம், எம். பழனிமுத்து, ஏ.இ. செல்லையா, சேரமான், தனபால், ஜானகிராமன், கிருஷ்ணமூர்த்தி, கே.பி. மாதவன், சத்தியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டு நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தை தூய்மைப்படுத்தினர்.

*14.8.97* அன்று காலை 9 மணியளவில், தமிழ்நாடு தலித் சேனா இளைஞர் அணி சார்பாக, தூய்மைப் பணி முகாம் கோட்டை ரயில் நிலையத்தில் நடைபெற்றது. முகாமிற்கு, தமிழ்நாடு தலித் சேனா இளைஞர் அணி செயலாளர் திரு. மு. பழனிமுத்து தலைமை தாங்கினார். மாநில தலித் சேனா கொள்கை பரப்புச் செயலாளர் திரு. ஈ. அன்பன் இப்பணியைத் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு தலித்சேனாவின் கல்வித்துறை பொதுச் செயலாளர் திரு. ராவணதாஸ், மாநில மகளிர் அணிச் செயலாளர் திருமதி. சங்கோ சா, தமிழ்நாடு ஜனதா தள மகளிர் அணித் தலைவி திருமதி. அமுதா கிரேஸ் மற்றும் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். "நமக்காக நாம் தூய்மை செய்வோம்" "எப்போதும் எங்கும் தூய்மையைக் கடைப்பிடிப்போம்" என்று முழக்கமிட்டவாறு நிலைய நடைமேடை மற்றும் படிகளை தூய்மைப்படுத்தினர்; பொது மக்களின் பாராட்டைப் பெற்றனர். ●

### சேலம் மாவட்டம்

தமிழ்நாடு தலித் சேனா இளைஞரணியின் சார்பில், தூய்மைப் பணி முகாம் சேலம் நகர ரயில் நிலையத்தில் 15.8.97 அன்று காலை 8 மணிக்கு நடைபெற்றது. முகாமிற்கு மாநில இளைஞரணிச் செயலாளர் திரு. மு. பழனிமுத்து தலைமையேற்றார். மாநில கொள்கை பரப்புச் செயலாளர் திரு. இ. அன்பன் தூய்மைப் பணியைத் துவக்கி வைத்தார்.

முகாமில் சேலம் மாவட்ட தலித் சேனா அமைப்பாளர் திரு.



சுந்தரம், புத்தர் ஒளி பன்னாட்டுப் பேரவை, சேலம் உட்கிளைச் செயலாளர் திரு. பி.சி. சம்பத், இளைஞரணி அமைப்பாளர் திரு. நல்லதம்பி, மாணிக்கம் மற்றும் 20-க்கும் மேற்பட்ட தலித் சேனா இளைஞர்கள் தூய்மைப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.








படிப்பகம்

www.padippakam.com



# செந்தமிழுக்கு அவமதிப்பா?

**புரட்சிக் கவிஞர். பாரதிதாசன்**

காட்சி : 1 இடம் : வீடு.

*(மகன் கூடத்தில் மேசையின் எதிரில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கின்றான். தாய் வருகிறார்)*

**தாய் :** கோயிலுக்குப் போக வேண்டாமா தம்பி?

**மகன் :** படித்துக் கொண்டிருக்கின்றேனம்மா.

**தாய் :** கோயிலைவிட முக்கியமா, படிப்பு?

**மகன் :** சிக்கலான கேள்வி! ஏனம்மா, படிப்பைவிட கோயிலா முக்கியம்?

**தாய் :** கோணல் புத்தி. கடவுள் அருளால் கல்வி வரும்; கல்வியால் அருள் கிடைக்குமா?

**மகன் :** 'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' என்று சொல்லுகிறார்கள், தமிழ்ச் சான்றோர்கள். கடவுள் அருளால் கல்வி வருவது உண்மையானால், கல்விச் சாலைகள் எதற்கு? நான் கஷ்டப்பட்டு படிப்பது எதற்கு?

**தாய் :** கல்வியால் கடவுள் அருள் கிடைக்குமானால் கட்டியிருக்கும் கோயில்கள் எதற்கு?

**மகன் :** என் கேள்வியும் அதுதானம்மா?

**தாய் :** (திகைப்பு) அப்படியானால் கோயிலுக்குப் போக மாட்டாயா?

**மகன் :** போகிறேனம்மா! கோயிலுக்கு அப்பா போகிற வழக்கமாயிற்றே.

**தாய் :** அவர் 'எக்சிபிஷனு'க்குப் போயிருக்கின்றார்.

**மகன் :** கோயிலைவிட 'எக்சிபிஷன்' முக்கியமென்று அப்பா நினைக்கின்றார். அது சரிதானே அம்மா?

**தாய் :** தப்பு. அவருக்கு நாளா வட்டத்தில், கோயில் நினைவு குறைந்து கொண்டு வருகின்றது.

**மகன் :** காரணம்?

**தாய் :** ஏழ்மைதான்.

**மகன் :** ஆமாம் அம்மா. பணக்காரருக்குத்தான் கோயில், கும்பாபிசேகம், தேர், திருவிழா எல்லாம். அப்படியிருக்கும் போது..?

**தாய் :** இப்போது கோயிலுக்குப் போகமாட்டேன் என்கின்றாயா?

**மகன் :** போகிறேனம்மா. அப்பா கோயிலுக்குப் போகாவிட்டால், நீங்கள் போவீர்களே அம்மா?



**தமிழை அருளிச் செய்து, தமிழர் கட்டிய திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் - தென்னாடுடைய சிவ பெருமானுக்குத் தமிழ் நஞ்சானால், செந்தமிழுக்கு ஏற்பட்டுள்ள அவமதிப்பு கொஞ்சமா அம்மா? தாய் மொழியை தலை கவிழ்க்க நிறுவப்பட்டதே சங்கரன் கோயில் என்றால் - எந்த நாய் அணுகும் அந்த நச்சுப்பொய் கையை!**

**தாய் :** பெண்கள் போகிற மாதிரியாகவா இருக்கிறது - இன்றைய கோயில்கள்!?

**மகன் :** உண்மை! வியப்பு! தாய் நுழையத் தகுதியற்ற கோயிலில் இந்தச் சேய் நுழையலாமா அம்மா?

**தாய் :** அப்படியானால் இப்பொழுது கோயிலுக்குப் போகமாட்டாயோ?

**மகன் :** போகிறேனம்மா.

**தாய் :** அபிஷேக ஆராதனைக்குரிய சாமான்கள் எல்லாம் இதோ! இந்தா பணம் (பணத்தை நீட்டுகிறார்)

**மகன் :** (பணத்தை வாங்காமல்) பரமன் பூசனைக்குப் பணம் எதற்கம்மா?

**தாய் :** கோயிலில் நுழைய டிக்கட்! மூலவரை நெருங்க டிக்கட்!

**மகன் :** ஷோ கொட்டகை மாதிரி! டிக்கட் வாங்கா விட்டால்?

**தாய் :** கதவின் தாழ் கடுகளவும் நகராது.

**மகன் :** அன்புதானே அம்மா சிவம்! அதற்கு அடைக்கும் கதவு ஏன்? அகற்றும் தாழ் எதற்கு?

**தாய் :** பெரியவர்கள் ஏற்பாட்டில் பிழை சொல்லலாமா, தம்பி.

**மகன் :** 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்'? நீங்கள் சொல்லும் பெரியோர்களை நோக்கித்தானம்மா திருவள்ளுவர் கேட்கிறார் அப்படி.

**தாய் :** கோயில் வருமானத்திற்காக அப்படி வைத்திருக்கிறார்கள்.

**மகன் :** நல்ல கூட்டுக் கம்பெனி! இன்னும் என்ன அம்மா செலவு?

**தாய் :** அபிஷேகம்! சாத்துபடி ஆனபின்பு, அய்யர் அர்ச்சனை என்று வருவார்; தட்சணை கொடுக்க வேண்டும். அதன் பிறகு உன் பெயர், குலம், கோத்திரம், நட்சத்திரம் எல்லாம் கேட்பார்.

**மகன் :** வகுப்புவாத விலாசம் எதற்கம்மா?



படிப்பகம்

www.padippakam.com

**தாய் :** தமிழிலே கேட்டுக் கொண்டு போய், சிவபெருமானிடம் இன்ன விலாசத்தாரை நல்லபடி வைக்க வேண்டும் என்று சமஸ்கிருதத்திலே....

**மகன் :** ரெகமண்டேஷனா? ஏனம்மா! தமிழிலே சொன்னால் சங்கரனுக்கு விளங்காதா? 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றாரே மாணிக்கவாசகர்; சிவபெருமான் திராவிடநாட்டு ஆசாமிதானே அம்மா?

**தாய் :** அதெல்லாம் தமிழிலே சொல்லக் கூடாது என்று சொல்லுகிறார்கள்.

**மகன் :** எந்த மடப்பயல்? தமிழை அருளிச் செய்து, தமிழர் கட்டிய திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் - தென்னாடுடைய சிவபெருமானுக்குத் தமிழ் நஞ்சானால், செந்தமிழுக்கு ஏற்பட்டுள்ள அவமதிப்பு கொஞ்சமா அம்மா! தாய்மொழியை தலை கவிழ்க்க நிறுவப்பட்டதே சங்கரன் கோயில் என்றால் - எந்த நாய் அணுகும் அந்த நச்சுப் பொய்கையை!

**தாய் :** அப்படியானால் இப்போது கோயிலுக்குப் போக மாட்டாயா?

**மகன் :** போக வேண்டுமா?

**தாய் :** (கோபமாக) ஆமாம் ... போகத்தான் வேண்டும்.

**மகன் :** போகிறேனம்மா. நான் கோயிலுக்குப் போய் திரும்பி வர எவ்வளவு நேரம் பிடிக்கும்?

**தாய் :** அபிஷேகம், சாத்துப்படி, ஆராதனை, வேத பாராயணம், பிரசாத விநியோகம், பெரிய மேளம், சின்ன மேளம், சாமி அம்மன் திருப்பள்ளி, திருக்கடைக் காப்பு, பண்டாரத்தின் தேவாரப் பண்ணோடு கோயில் கதவடைப்பு.

**மகன் :** தமிழுக்கு என்ன அவமதிப்பு! போகவா அம்மா?

**தாய் :** (கோபமாக) என்ன, போகவா - அம்மா.

*(மகன் கோயிலுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு போகிறான்)* ●

'குயில்' (1.1.1948) இதழில், புரட்சிக் கவிஞர் எழுதிய - 'கோயில் இரு கோணங்கள்' நாடகம்.

## மானத் தமிழனின் மாதிரி வடிவம் !



வெளிச்சக் கீற்றுகள்
வெள்ளித் தாடி!
விடியல் வார்த்தைகள்
வரும் கோடி!

துள்ளித் திரியும்
தொன்னூறு வயதும்
கொள்ளி எரியும்
இருவிழி முழுதும்!

சொல்லில் அடங்கா
சாதிக் கொடுமைகளைச்
சொல்லிச் சொல்லி
அடித்து விரட்டிய . . .

மானத் தமிழனின்
மாதிரி வடிவம்!
மதிய நேர
சூரியக் குடும்பம்
அவர்தான் பெரியார்!

பெரியார் பிறந்த நாள் :
செப்டம்பர் 19, 1879

- கவிஞர். பிரபு

## அம்பேத்கரை அவமதித்த அருண்சோரிக்கு கண்டனம்

### தலித் சேனா எச்சரிக்கை!

"தவறான கடவுள்களை வணங்குதல்" (Worshipping False Gods) என்ற ஆங்கில நூலில், அம்பேத்கரைக் கொச்சைப்படுத்தும் வகையில் – அருண்சோரி என்ற பத்திரிகையாளர் ஆதாரமின்றி எழுதியுள்ளார். இது, 'இந்துத்துவ' வன்முறையாளர்களின் கூட்டுச் சதி ! இந்நூலாசிரியர் அருண்சோரியை, 'தலித் சேனா' வன்மையாகக் கண்டிக்கின்றது.

### அருண்சோரி நூலுக்கு மறுப்பு வெளிவந்துவிட்டது!

அம்பேத்கர் பற்றிய அருண்சோரியின் நூலுக்கு, திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்கள், சென்னை – பெரியார் திடலில் 30.7.97, 5.8.97 ஆகிய இரு நாட்கள் ஆற்றிய மறுப்புரை – நூல் வடிவத்தில் வெளிவந்துள்ளது. இந்நூலை, ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் தலித் ஆர்வலர்கள் அனைவரும் படித்துப் பயன்பெற விழைகின்றோம்.

**நூல் : "அம்பேத்கர் பற்றிய அருண்சோரி நூலுக்கு மறுப்பு"**

**பக்கம் :** 72 விலை ரூ.9/–

**வெளியீடு / கிடைக்குமிடம் :**

திராவிடர் கழகம், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, சென்னை – 600 007.



படிப்பகம்

www.padippakam.com

*With Best Compliments*

*From*

# J.P.V. ESTATE

154, PURASAWALKAM HIGH ROAD
KELLYS, CHENNAI - 600 010.
Ph : 6422672, 6426471.

படிப்பகம்

www.padippakam.com



## உண்டு

**நேரடி நியமனத்தில் மட்டுமல்லாமல், பதவி உயர்விலும் ஆதிதிராவிடர்–பழங்குடியினருக்கு ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க, அரசு விரைவில் ஆணை பிறப்பிக்கும் என்று தமிழக அரசு, 24.5.97 அன்று அறிவித்துள்ளது.**

அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடரும் - பழங்குடியினரும் உரிய அளவில் தற்போது இல்லை என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. அரசுப் பணிகளில் அவர்களுக்கு உரிய ஒதுக்கீட்டை அளிப்பதில் எவ்விதத்திலும் மனம் குன்றியதில்லை. இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு இடைநிலை ஆசிரியர் தகுதி பெற்ற ஆதிதிராவிடர் - பழங்குடியினர் காத்திருப்புப் பட்டியலில் இல்லை என்ற போதிலும், இந்தப் பணியிடங்கள் இவர்களுக்கே போய்ச் சேரவேண்டும் என்பதில், அரசு உறுதியாக உள்ளது. அதற்காக விதிகளைத் தளர்வு செய்து - பட்டதாரிகளை நியமனம் செய்ய ஆணை பிறப்பித்துள்ளது.

நேரடி நியமனங்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு என்று நிர்வாக விதி அமைந்துள்ளதால், 25 முதல் 50 சதவிகிதம் வரையே பணி இடங்களுக்கு ஒதுக்கீட்டு நடைமுறையைக் கடைப்பிடிக்க முடிகின்றது. இதை மாற்றும் வகையில், நேரடி நியமனத்தில் மட்டுமில்லாமல் - பதவி உயர்விலும் ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்கு இடஒதுக்கீட்டை கடைப்பிடிக்க அரசு விரைவில் ஆணை வெளியிடும்.

ஒரு துறையில், கீழ் மட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரை உள்ள வெவ்வேறு பணியிடங்களுக்கும் நேரடி நியமனம் செய்வதற்கும் வழி வகுக்கப்படும். இதனால், உள்ளிருப்பு பணியாளர்களுக்கு குந்தகம் ஏற்படாத வகையில், நேரடி நியமனத்தில் அவர்களும் பங்கு கொள்ளும் வகையில், ஏற்பாடு செய்யப்படும். இதனால் கீழ் மட்ட பணியிடங்களில் மட்டுமே ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் பங்கேற்க முடிகின்றது என்ற நிலை மாறி எல்லா நிலைகளிலும் அவர்களது பங்கேற்பு சீராக அமையும். அனைத்துத் தேர்வுக் குழுக்களிலும் ஒரு ஆதிதிராவிடராவது உறுப்பினராக இனி இருப்பார். அதேபோல் ஒவ்வொரு துறையிலும் இவர்களது கோரிக்கைகளை கேட்கவும், ஏற்கவும் ஒவ்வொரு பற்றாளர் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தப் பணியைக் கவனிப்பார். ●

**"பதவி உயர்வில் தாழ்த்தப்பட்ட – மலைவாழ் மக்களுக்கான இடஒதுக்கீடு, நவம்பர் 15க்குப் பிறகும் தொடரும் என்பதற்கான ஆணையை மய்ய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது."**

*- 'இந்து', 7.6.97*

## இல்லை

**தாழ்த்தப்பட்ட – பழங்குடியின அலுவலர்களுக்கு, பதவி உயர்வில் இடஒதுக்கீடு இல்லை : உயர்நீதிமன்றம் தீர்ப்பு**

அரசுத் துறைகளில், முதல் பிரிவில் பணியாற்றும் தாழ்த்தப்பட்ட - பழங்குடி இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வில் - இடஒதுக்கீடு பின்பற்றக்கூடாது, என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

'அகில இந்திய இன்சூரன்ஸ் நிறுவன எஸ்.சி, எஸ்.டி. பணியாளர்கள் நடவடிக்கைக் குழு' அளித்த 'ரிட்' மனுவை விசாரித்த நீதிபதிகள் இத்தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

முதல் பிரிவு அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அளிக்கும் போதும் இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் என்று நடுவண் அரசு அளித்த ஆணையை, இன்சூரன்ஸ் நிறுவனங்கள் வேண்டுமென்றே செயல்படுத்தாமல் உள்ளன என்று மனுதாரர்கள் கூறியிருந்தனர்.

நீதிபதிகள் ஏ.ஆர். லட்சுமணன், எம். கற்பகவினாயகம் ஆகியோர் இவ்வழக்கை விசாரித்து அளித்த தீர்ப்பு :

எஸ்.சி., எஸ்.டி சமூகத்தைச் சேர்ந்த முதல் பிரிவு அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அளிக்கும்போது, இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் என்று அரசிடம் எந்த கொள்கையும் இல்லை. அதுபோன்ற ஆணையை, நடுவண் அரசு வெளியிட்டிருப்பதாக - ஒரு அனுமானத்தில் இந்த மனு அளிக்கப்பட்டுள்ளது. 2-வது, 3வது, 4வது பிரிவு அலுவலர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதில், இடஒதுக்கீடு அளிக்கப்படுவதாய் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அரசியல் சட்டத்தின் 16-வது பிரிவில் செய்யப்பட்ட திருத்தம், பதவி உயர்விலும் இடஒதுக்கீட்டைப் பெறுவதற்கான எந்த உரிமையையும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கவில்லை. அரசுத் துறைகளில், தாழ்த்தப்பட்டவர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை எனக் கருதி, அதற்கான சட்டத்தை அரசு இயற்றினாலொழிய அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க முடியாது. மேலும், அரசியல் சட்டத்தின் 16-வது பிரிவு (4-ஏ)-ன் கீழ், இன்சூரன்ஸ் துறையில் பிரிவு 1-ல் பதவி உயர்வுக்கு இடஒதுக்கீடு அளிக்க வழிவகைகள் இல்லை என்று நீதிபதிகள் கூறினர். ●



படிப்பகம்

www.padippakam.com



# "பாடல்கள் மக்களின் உணர்வுகளை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன"

**கத்தர், ஆந்திர மாநிலத்தின் புரட்சிப் பாடகர். தமது பாடல்களால் கோடான கோடி ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்கு வித்திட்டு வருபவர். இந்த ஆண்டு ஏப்ரல் திங்கள், எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகள், இவரைப் பதம் பார்த்தன. ஆனால், சில கால ஓய்வுக்குப் பிறகு - இவர் மீண்டும் விடுதலைப் பாடல்கள் மூலம் மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்தப் புறப்பட்டுவிட்டார்! மும்பையில் நடைபெற்ற 'போலி சுதந்திர' மாநாட்டில் பங்கேற்க வந்த கத்தருடன் ஒரு பேட்டி.**

**❐ ஒரு சிறந்த கவிஞரும், அரசியல் ஆர்வலருமான தங்களின் கற்பனை வளத்தை - கொள்கைகள் ஆதிக்கம் செலுத்துகின்றதா?**

❍ ஒரு கலைஞன், வளமான பாடல்களை இயற்ற வேண்டும் என்பது எனக்குத் தெரியும். ஆனால், சமூக நிலையும் - கற்பனை வளமும் ஒருங்கிணைக்கப்படும்பொழுதுதான், அது கலையாகப் பரிணமிக்கின்றது. எடுத்துக்காட்டாக, நான் இந்த அறையில் அமர்ந்து கடலைப் பார்த்துக் கொண்டு, கடலில் பயணம் செய்பவன்போல கற்பனை செய்து கொண்டிருக்கின்றேன். கடல் அலைகளிலிருந்தே நான் ராகத்தை அமைக்கின்றேன். கடலிலுள்ள மீனைப் பற்றி என் மனம் எண்ணுகின்றது; பிறகு, இந்தக்கடல் என் பார்வையிலிருந்து மறைகின்றது; நான் கனவுலகத்திலிருந்து மீண்டு, உலகத்தை இயல்பாகப் பார்க்கின்றேன். ஏனெனில், எந்திரப் படகுகளில் செல்லும் மீனவர்கள், 'டாலரின்' ஆதிக்கத்தால் - நீரின் வளத்தை அழிக்கின்றனர். இதுதான் என் மனதை ஈர்க்கின்றது. இதை எல்லாம் நான் பாடுகின்றேன்.

**❐ இவை எல்லாம் உயிருள்ள கற்பனைகள். ஆனால், பல்வேறு அரசியல் பாடல்கள் உயிரற்று உள்ளனவே?**

❍ நமது ரத்தத்தை உறிஞ்சும் பன்னாட்டு நிறுவனங்களைப் பற்றி மட்டுமே முழக்கங்கள் எழுப்புபவன் - எந்த மாதிரிக் கவிஞன்? நாம் இயல்பான - பொறிதட்டும் உருவகங்கள் மூலமே கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். நான் என்னுடைய பாடல்களில், மக்கள் பயன்படுத்தும் 'ரெக்சோனா' சோப்பு பற்றியும், நாள்தோறும் பல்துலக்கும் 'கால்கேட்' பற்பசை பற்றியும், தங்கள் வீடுகளில் அலறும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பற்றியும், தங்கள் பாக்கெட்டை அலங்கரிக்கும் 'பைலட்பேனா' பற்றியும் பாடுகின்றேன்.

●●

**பெண்கள், தலித் மக்கள், மலைவாழ் மக்கள் மற்றும் தேசிய இனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை தீர்ப்பதில் அரசு தோல்வியுற்றது. எனவேதான், நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை தோல்வி அடைந்துவிட்டது என்கின்றோம். காந்தி இன்று உயிருடன் இருந்திருந்தால், இந்த சுதந்திரம் போலியானது என்று சொல்வதில் - முதல் மனிதராக இருந்திருப்பார்.**

●●

இதுபோன்ற நுகர்வு முதலீடுகளின் மூலம்தான் - பன்னாட்டு நிறுவனங்கள், நம்மை இன்று அடிமையாக்கியுள்ளன. இன்றைய விளம்பரங்களைத்தான் நாம் இன்று எதிர்த்தாக வேண்டும்; அவைதான் முதலாளியத்தின் இன்றைய கலை வடிவம் - ஓராயிரம் முறை திரும்பத் திரும்ப சொல்லப்படும் பொய்!

ஒரு கவிஞன் என்ற முறையில், இதுபோன்ற சதி திட்டங்கள் குறித்து எச்சரிப்பதே என் கடமை. இதை, இந்த நேரத்திற்குப் பொறுத்தமான முற்போக்கு இலக்கியங்கள் மூலம் எதிர்கொள்ளலாம். தெலுங்கில் ஒரு பழமொழி உண்டு: 'சூரியன் நுழைய முடியாத இடத்திற்குக்கூட ஒரு கவிஞன் செல்கிறான்!' ஆம். பாடல்கள் மக்களின் உணர்வுகளை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன; ஆற்றல்களைப் புதுப்பிக்கின்றன.

**❐ நீங்கள் இங்கு 'போலி சுதந்திர' மாநாட்டில் பங்கேற்க வந்துள்ளீர்கள். அரை நூற்றாண்டு சுதந்திரம், நல்ல விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்று கருதுகின்றீர்களா?**

❍ இல்லை. 'சுதந்திரத்திற்கு' முன்பே பகத்சிங் குறிப்பிட்டது போல், அடித்தள மக்களிடையே ஒரு சமூகப் புரட்சி ஏற்படும் முன்பே, ஆங்கிலேயர்கள் சென்று விட்டார்கள் எனில், சுதந்திரம் என்பது - இந்நாட்டின் முதலாளி வர்க்கத்திற்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுக்கும் செயலேயாகும். ஆனால், பகத்சிங் சொன்னதை எவருமே பொருட்படுத்தவில்லை.

நாட்கள் செல்லச்செல்ல, பன்னாட்டு நிறுவனங்களின் நண்பனாகிவிட்ட இந்திய அரசு - இன்றைக்கு ஆதிக்கச் சார்பான பொருளாதார, அரசியல், பண்பாட்டு நலன்களையே எதிரொலிக்கின்றது. மேல்தட்டில் ஆங்கிலேயர், நிஜாம், அரசன் என 'சுதந்திர' இந்தியாவின் அரசியல்வாதிகளின் மேல் உள்ளனர்.

**❐ இது, மார்க்சிய - லெனினிய வாதிகளின் நிலைப்பாடு; நாடாளுமன்ற மக்களாட்சி முற்றிலும் தோல்வி அடைந்து விட்டது என்பது போன்ற கருத்தை வெளிப்படுத்துகின்றதே?**

❍ ஒரு நல்ல மனிதன் தேர்தலில் நின்று வெற்றி பெற முடியாது



படிப்பகம்

www.padippakam.com

# "அரசும், ஆதிக்கவாதிகளுமே வன்முறையாளர்கள்"


என அனைவரும் ஒத்துக் கொள்ளும்போது, பணமும் - படை பலமும் தான் ஒருவரை அதிகாரத்தில் அமர்த்துகின்றது என்பது தெளிவாகின்றது. இன்று, நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற - நீங்கள் ஒரு குற்றவாளியாகவோ அல்லது ஏமாற்றுக்காரனாகவோ இருக்க வேண்டும்.

அய்ம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் நாம், 'பாதி - காலனித்துவ', 'பாதி - முதலாளித்துவ' சமூகத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கல்வி, குழந்தைத் தொழிலாளர், நலவாழ்வு, போன்ற பிரச்சினைகளைக்கூட, நாம் இன்னும் தீர்க்க முற்படவில்லை. பெண்கள், தலித் மக்கள், மலைவாழ் மக்கள் மற்றும் தேசிய இனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசு தோல்வியுற்றது. எனவேதான், நாடாளுமன்ற ஜனநாயக அமைப்புமுறை தோல்வி அடைந்துவிட்டது என்கின்றோம். காந்தி இன்று உயிருடன் இருந்திருந்தால், இந்த சுதந்திரம் போலியானது என்று சொல்வதில் - முதல் மனிதராக இருந்திருப்பார்.

**❐ 'நக்சலைட்' இயக்கம் ஆயுதப் போராட்டத்தை மட்டுமே உயர்த்திப் பிடிக்கின்றது என்றொரு விமர்சனம் அவர்கள் மீது உண்டு. அதுபற்றி?**

❍ இந்திய அரசு, இந்நாட்டு மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றை அளிக்கத் துவங்கினாலே - 'நக்சலைட்' இயக்கம் இல்லாமல் போய்விடும். ஒரு நல்ல அமைப்பு இருந்தால், யார் போராடப் போகிறார்கள்? இந்தியாவின் ஒடுக்கப்பட்ட மக்கள், தாங்கள் சுரண்டப்படுவதையும், அரசின் வன்முறையையும் எதிர்த்துதான் - ஆயுதங்களைத் தூக்கியுள்ளனர். அரசும் அதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆதிக்கவாதிகளுமே வன்முறையாளர்கள்!

இன்று அரசு, பகத்சிங்கின் தியாகத்தை எண்ணி - அவரின் நினைவு நாளைக் கொண்டாடுகின்றது. ஆனால், இப்புரட்சியாளரின் கருத்தை அலட்சியப்படுத்துகின்றது. உழைக்கும் மக்கள், விவசாயிகள், மலைவாழ் மக்கள் தாங்கள் சுரண்டப்படுவதை, நீண்ட நாட்களுக்குப் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்; தங்களை விடுவித்துக் கொள்ள ஆயுதப் போராட்டத்தை நடத்தியே தீருவார்கள்.



இந்திய அரசு, இந்நாட்டு மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றை அளிக்கத் துவங்கினாலே - 'நக்சலைட்' இயக்கம் இல்லாமல் போய்விடும். ஒரு நல்ல அமைப்பு இருந்தால், யார் போராடப் போகிறார்கள்? இந்தியாவின் ஒடுக்கப்பட்ட மக்கள், தாங்கள் சுரண்டப்படுவதையும், அரசின் வன்முறையையும் எதிர்த்துதான் ஆயுதங்களைத் தூக்கியுள்ளனர்.

**❐ ஆனால், வன்முறை நம்மீதே திரும்புகின்றதே! மேலும், புரட்சி மீண்டும் அவர்களையே பாதிக்கின்றதே? இல்லையா?**

❍ ஆயுதத்தை மட்டுமே நம்பி இருந்தால், எந்த ஒரு இயக்கமும் வெற்றி பெற முடியாது. அவை மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். ஏனெனில், இறுதியில் பெரும்பான்மை மக்களே - இந்நாட்டை விடுதலை பெறச் செய்வர். ஆயுதம் என்பது ஒரு வழிமுறை; அதுவே எல்லை அல்ல. ஆனால், உண்மை என்னவெனில், 'நக்சலைட்' இயக்கம் மக்களிடமிருந்து வரவேற்பு பெற்று வருவதற்கு - துப்பாக்கி மட்டுமே காரணம் அல்ல. அந்த இயக்கத்தின் கொள்கைகள், விடுதலை மற்றும் நியாயத்திற்கான அடித்தளமாக இருப்பதால் - தனி மனிதர்கள் இவ்வியக்கத்திற்காக உயிரையும் கொடுக்கத் துணிந்துள்ளனர்.

**❐ ஒரு வரலாற்று முக்கியத்துவத்தை அது உணர்த்துகின்றதா?**

❍ நீங்கள் யார் பக்கம் இருந்து பாடினீர்கள் என்று வரலாறு எங்களைக் கேட்கும். நாங்கள் ஒடுக்கப்படும் மக்களுக்காகப் பாடினோமா? அல்லது அடக்குமுறையாளர்களுக்காகப் பாடினோமா என்று? ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலைபெற 190 ஆண்டுகள் ஆனது. இன்று, புதிய அரசர்களிடமிருந்து விடுதலை பெறுவது குறித்து, நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

நேர்காணல் : 'டைம்ஸ் ஆப் இந்தியா'

தமிழில் : புலேந்திரன்.



படிப்பகம்

www.padippakam.com



# தமிழர்களின் வாழ்க்கையையே விளையாட்டாக்கும் ஜூனியர் விகடன்!

## மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் இதழ்கள் – 5

**நெடுஞ்செழியன்**

***"பிறரைக் குற்றம் சொல்லும் போது மட்டும் – 'கள், சாராயம் குடிப்பது கெடுதி என்று தெரிந்திருந்தும் அதைக் குடிக்கின் றார்களே! என்ன அறிவுகெட்ட மக்கள்; மானங்கெட்ட மக்கள்!' என்கின்றோம். ஆனால், அந்த அறிவும், மானமும் நமக்கு இருக் கின்றதா என்பதைப் பார்ப்பவர்கள், நம்மில் 100–க்கு ஒருவரைக்கூடக் காணோம். பார்ப்பனப் பத்திரிகைகள், பார்ப்பன ஆதிக் கத்திற்கு மட்டுமல்ல – நம்முடைய இழிவுக் கும், தாழ்மைக்கும், அழிவுக்கும் நடத்தப் படுகின்றன என்பதை அறிந்திருந்தும் – அதைப் பணங்கொடுத்து வாங்கிப் படிப்பவர் களுக்கு அறிவும், மானமும் இருக்கின்றதா என்பதைக் கவனிப்பதில்லை."***

**– தந்தை பெரியார், 'குடி அரசு', 30.1.1927**

அறிவாசான் தந்தை பெரியார் அவர்கள், பத்திரிகைகள் பற்றி 70 ஆண்டுகளுக்கு முன்பு கூறியது - இன்றைக்கும் எவ்வளவுப் பொருத்தமாக இருக்கின்றது என்பதை, 'ஜூனியர் விகடன்' போன்ற பத்திரிகைகளை ஊன்றிப் படித்தாலே தெளிவாக விளங்கும்.

சென்னை அண்ணா சாலையில் இருந்து, 'வாசன் பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்' சார்பில் - 'ஆனந்த விகடன்', 'ஜூனியர் விகடன்' என்ற இரு பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவை இரண்டுக்கும் ஆசிரியர் எஸ். பாலசுப்பிரமணியன். 'ஆனந்த விகடன்' வாரம் ஒருமுறையும், 'ஜூனியர் விகடன்' வாரம் இருமுறையும் வெளியிடப்படுகின்றது. இந்த செப்டம்பர் 1 முதல் 'விகடன் பேப்பர்' என்ற மாலை நாளேடு, சென்னையில் மட்டும் வெளியிடப்படுகின்றது. சரியான விற்பனை இல்லாததால், இதற்கு முன்பு வெளியிடப்பட்டு வந்த 'ஜூனியர் போஸ்ட்' நிறுத்தப்பட்டு விட்டது.

துப்பறியும் பத்திரிகையாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ள 'ஜூனியர் விகடன்' - முழுக்க முழுக்க வதந்திகளையும், கிசுகிசுக்களையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால், இதன் மற்றொரு முகம் - அநீதி எங்கு நடந்தாலும் தட்டிக் கேட்பது போன்ற ஒரு மாயையை மக்களிடையே தோற்றுவித்துள்ளது. சமூகப்பிரச்சினையில் மிகுந்த அக்கறையுடன் செயல்படுவதாகத் தன்னை இவ்விதழ் அடையாளப் படுத்திக் கொள்கின்றது.

ஆனால், உண்மையில் அந்தந்த நேரத்திற்கு ஏற்றாற்போல - கற்பனையான பரபரப்புச் செய்திகளை வெளியிட்டு பணம் சம்பாதிப்பதே இதன் நோக்கம். அந்தவகையில், மக்களைச் சிந்திக்க விடாமல், அவர்களை உணர்ச்சி வயப் படுத்துவதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளது.

'ஜூனியர் விகடனுக்கு' வரவேற்பு, நகரங்களிலும் - குறிப்பாக நடுத்தர வகுப்பினரிடையேதான் உள்ளது. இப்பத்திரிகைக்கு பெண் வாசகர்கள் அந்த அளவிற்கு இல்லை. ஓரளவு படித்தவர்களிடையே இப்பத்திரிகை விற்பனையாவதால், பக்கத்திற்குப் பக்கம் ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தி - தன்னை ஒரு அதிமேதாவி பத்திரிகையாக நினைத்துக் கொண்டுள்ளது. எ.கா : 'ஜூ.வி. ஸ்பெஷல் பிராஞ்ச்', 'மிஸ்டர் கழுகு', 'Follow-Up', 'டயலாக்', 'ஜூ.வி. ஷோ', 'நியூஸ்ரூம்', 'கவர் ஸ்டோரி,' 'ஸ்பாட் ரிப்போர்ட்' . . . மேலும், கட்டுரைகளிலும் ஆங்கில வார்த்தைகள் குவிந்து கிடக்கின்றன. இதிலிருந்து என்ன தெரிகின்றது? ஒரு தமிழ் பத்திரிகையை நடத்துபவர்களுக்கு, ஒழுங்காகத் தமிழ் எழுதக்கூடத் தெரியவில்லை. இதன் எழுத்து நடைகூட பேச்சு நடைபோலவே இருக்கும்.

தமிழில் நடத்தப்படும் ஒரு பத்திரிகையில், தமிழ் வார்த்தைகளே அரிதாகத் தென்படுகின்றன; எழுதும் நடையில்கூட ஒரு ஒழுங்கு முறை இருப்பதில்லை எனில், இது எப்படித் தரமான பத்திரிகையாகும்? வாசகர்களே! ஒருமுறை இந்தக் கண்ணோட்டத்தில், இந்த இதழைப் படித்துப் பாருங்கள். அப்புறம் தெரியும் இதன் தரம் என்னவென்று!

### "நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும் பத்திரிகைகள்"

**- காஷ்மீர் முதலமைச்சர் -**

"பத்திரிகைகள், இம்மாநிலத்தின் தீவிரவாதத்தை மிகைப்படுத்தி அரசையே நிலை குலைய வைக்கின்றன" என்று ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் திரு. பாரூக் அப்துல்லா, குற்றம் சாட்டியுள்ளார். நடந்ததை உள்ளவாறே சரியாக வெளியிடாவிட்டால் - பத்திரிகைகள் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பத்திரிகை செய்தியாளர்கள் எனப்படுபவர்கள்தான், அரசு நிலைகுலைந்து போவதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இவர்கள், நாட்டை ஆக்கவும் அழிக்கவும் செய்கின்றனர். செய்தியாளர்கள் செய்திகளை வெளியிடுவதில் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

- 'இந்து' நாளேடு 23.08.97



படிப்பகம்

www.padippakam.com

மேலும், ஒவ்வொரு கட்டுரைக்கும் கொடுக்கப்படும் தலைப்புகள் - மக்களிடையே பீதி ஏற்படுத்தும் வகையில்தான் இருக்கும். எ.கா : 'திடுக்கிடும் பின்னணி', 'அதிரடிப் பகுதி', 'திடுக் ரிப்போர்ட்', 'மர்மத் தொடர்', 'திடுக்கிட வைக்கும் புகைப்படம்'. அதற்கேற்றார்போல, புகைப்படங்களையும் அச்சமூட்டும் வகையில் வெளியிடுவது, தலைப்புக்களைக்கூட ரத்தத்தில் நனைந்திருப்பது போல வடிவமைப்பது. ஆனால், உள்ளே படித்துப் பார்த்தால் அந்தளவிற்குப் பரபரப்பும் இருக்காது; விறுவிறுப்பும் இருக்காது. பல நேரங்களில், எங்கோ வெளிநாட்டில் நடந்தவற்றை இங்கு நடந்ததுபோல எழுதிக் கொண்டு வந்து - கடைசியில்தான் அது வெளிநாட்டுச் செய்தி என்று தெரியவரும்.

இப்படித்தான் வாசகர்களும் ஒவ்வொரு முறையும் வாங்கிப் படித்து ஏமாந்து போகின்றனர். ஆனால், ஏன் மீண்டும் வாங்குகின்றனர் என்ற கேள்வி எழும்! தயவு செய்து இக்கட்டுரையின் முன்னுரையில் உள்ள தந்தை பெரியாரின் மேற்கோளை, மீண்டும் ஒருமுறை படியுங்கள். விடை கிடைத்துவிடும்!

இப்பத்திரிகையில், இவர்களாகத் துப்பறிந்து செய்திகளை வெளியிடுவது இல்லை. அரசுத் துறைகளில் உயர் அதிகாரிகளுக்குள் பிரச்சினைகள் வரும்பொழுது, ஒருவரைப்பழிதீர்த்துக் கொள்ள மற்றொருவர் இந்த இதழுக்கு செய்திகளைத் தந்துவிடுகின்றனர். இதேபோல், அரசியல் கட்சிகளுக்குள் உள்ள தலைவர்களுக்குள் பிரச்சினை எழுந்தால் - அவர்கள் இவர்களிடம் கூற, அது 'கழுகு' பேசுவது போல செய்தியாகத் தரப்படுகின்றன.

மேலும், இவர்களின் கற்பனைத்திறன் மூலம் இச்செய்தியை சுவையோடு தருவது போல ஒரே தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றன. வாசகர்களும் இந்த கற்பனைச் செய்திகளைப் படித்து - விவாதித்து அத்துடன் மறந்து விடுகின்றனர். ஆனால், இதில் வெளிவரும் பெரும்பான்மைச் செய்திகளில் உண்மை இல்லை என்பதை - தொகுத்துப் படித்துப் பார்த்தால் விளங்கி விடும். ஜோசியர் ஆருடம் கூறுவதுபோல், பலவற்றில் ஏதாவது ஒன்று சரியாக நடந்துவிட்டால், உடனே 'ஜூ.வி' அன்றே சொன்னது எனத் தன்னைத் தானே கட்டம் போட்டு பீற்றிக் கொள்ளும்.

தற்பொழுது, 'ரியாக்ஷன்' என்ற தலைப்பில், ஒரு பக்கம் முழுவதும் இவர்கள் முதல் வாரம் வெளியிட்ட செய்திகளுக்கு மறுப்பாக அதற்கடுத்த வாரம் வருகின்றது. இதிலிருந்தே தெரிகின்றதா, இவர்கள் வெளியிடும் செய்திகள் எந்த அளவிற்கு உண்மை என்று!

இது போன்ற செய்திகளுக்கு வரும் மறுப்புகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு : 25.6.97 நாளிட்ட இதழில், தோட்டாதரணி என்பவர் எழுதுகின்றார் : "கடந்த 15.6.97 நாளிட்ட இதழில் தஞ்சை பெரியகோவில் யாகசாலையை நான் வடிவமைத்ததாக எழுதியிருந்தீர்கள். அதற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை". பாருங்கள் இவர்களின் கூர்மையை!

'மிஸ்டர் கழுகு' பகுதியின் நடையே ஒரு நாடகத் தன்மையுடன்தான் இருக்கும். அப்பொழுதுதான் இப்பகுதியை மக்கள் கவனத்துடன் படிக்க முடியாமல் போகும். கல்கி எழுதிய 'பொன்னியின் செல்வன்', 'சிவகாமியின் சபதம்' போன்ற கதைகளைப் படிக்கும்பொழுது - அவை கதைகள் என்பதால், அதிலுள்ள கற்பனை வளத்தைப் பாராட்டி அத்துடன் நிறுத்தி விடுகின்றோம். ஆனால், 'மிஸ்டர் கழுகு' பகுதியில், இதே போன்றதொரு கற்பனை வளத்துடன் ஆதாரமில்லாத செய்திகளைத் தருவதால், வாசகர்கள் உண்மை என நம்பிவிடுகின்றனர்.

எடுத்துக்காட்டாக, 7.5.97 நாளிட்ட 'ஜூ.வி'-இல் "மூப்பனாருடன் கலைஞர் டெலிபோனில் பேசினாராம். மந்திரி சபையில் சேர முடிவெடுத்ததற்கு நன்றி என்ற ஒருவரியுடன் டெலிபோன் பேச்சு முடிந்துவிட்டதாம்". ஏதோ இவர்கள் - தமிழக முதல்வரின் அந்தரங்க செயலாளர், நேரிலேயே பார்த்ததுபோல் செய்தி வெளியிடுகின்றனர்.

அண்மைக் காலங்களில், இதுபோன்று பரபரப்பாகப் பொய் செய்திகள் வெளியிட்டதன் உச்சகட்டம் எது தெரியுமா? 30.3.97 நாளிட்ட இதழில், "ராஜீவ் கொலைகாரர்களுடன்... திடுக்கிட வைக்கும் புகைப்படம்" எனத் தலைப்பிட்டு ஜெயலலிதாவுடன் பலரும் இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டு - உள்ளே இரண்டரைப் பக்கத்திற்குக் கட்டுரையும் வெளியிடப்பட்டி

---

ஒரு விகடன் பிரசுரம் **ஜூனியர் விகடன்**

**தமிழகம் முழுவதும் நடைபெறும் செய்திகளை வெளியிடும் 'ஜூனியர் விகடன்', கோவாவிலிருந்து மக்களால் துரத்தி அடிக்கப்பட்டு - சென்னைக்கு அருகே உள்ள கும்மிடிப்பூண்டியில் தஞ்சம் அடைந்துள்ள ஆபத்து மிகுந்த 'தாப்பர் டூபான்ட்' நயிலான் 6,6 தொழிற்சாலைக்கு எதிராக எழுந்துள்ள, எந்தவொரு மக்கள் போராட்டத்தையும் இந்த இதழில் வெளியிடவில்லை. இதனை இப்பத்திரிகையின் பாணியிலேயே இப்படிச் சொல்லலாம் :**

**செல்லுலார் நியூஸ் :**

**அண்ணாசாலையில் இருந்து, வாரம் இருமுறை வரும் செய்திப் பத்திரிகை, கும்மிடிப்பூண்டி அருகே வந்துள்ள ஆபத்தான தொழிற்சாலைக்கு எதிராக எழும் கடும் எதிர்ப்புகள் குறித்து - எவ்வித செய்தியையும் வெளியிடுவதில்லை. இதற்குக் காரணம், இந்த ஆலை முதலாளிகள் - இப்பத்திரிகையின் ஆசிரியரையும், நிருபர்களையும் வழக்கம் போல் நன்கு "கவனித்துள்ளனர்" என்பதே!.**



படிப்பகம்

www.padippakam.com

ருந்தது. அதில், அதன் நிருபர்களுக்குப் புகழாரம் வேறு! ஆனால், பத்திரிகை வெளிவந்த சில மணிநேரங்களுக்குள்ளாகவே, அது ஒரு போலி புகைப்படம் என்பது உலகிற்குத் தெரியவந்தது. இதற்குள் இவர்களின் அனைத்து பத்திரிகைகளும் விற்றுத் தீர்ந்து விட்டன.

அதற்கு அடுத்தவாரம், வெளிவந்த 'ஆனந்த விகடன்' தலையங்கத்தில், "இளவலுக்கு அறிவுரை" என்ற தலைப்பில், 'ஜூ.வி.யில் இனிமேல் செய்திகளை பொறுப்புணர்வுடனும், நிதானத்துடனும் வெளியிட வேண்டும்!' என்று எழுதியது.

இதில், வேடிக்கை என்னவெனில், 'ஆனந்த விகடன்' ஆசிரியரும், 'ஜூனியர் விகடன்' ஆசிரியரும் ஒருவரே! ஆனால், இரண்டு இதழ்களும் வெவ்வேறு என்பது போல் மக்களிடையே – ஒரு மாயையை ஏற்படுத்துவதற்குத்தான் இந்த முயற்சி. இவர்களின் பத்திரிகைகளை காசு கொடுத்து வாங்கும் பொது மக்களை – எப்படி முட்டாள்களாக்குகின்றனர் பாருங்கள். இது போன்று இவர்களின் கபட நாடகங்களுக்கு எடுத்துக்காட்டாக, எண்ணற்றச் செய்திகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஒவ்வொரு இதழிலும் 'டயலாக்' பகுதிக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்படுகின்றது. இப்பகுதியில் வெளிவரும் பெரும்பாலான செய்திகள் கற்பனையே. வாசகர்கள் தங்கள் பெயர் பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காக, இப்படி எழுதுகின்றனர். இப்பகுதியில் பெண்களைக் கொச்சைப்படுத்தும் உரையாடல்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகையில், மூன்று அல்லது நான்கு பக்கங்கள் வண்ணத்தில் - அரைகுறை ஆடைகளுடன் நடிகைகளின் படங்களை வெளியிட்டு, அவர்கள் பற்றிய கற்பனைச் செய்திகளையும் வெளியிடுகின்றனர். 'ஆபாச சுவரொட்டிகளை அகற்ற வேண்டும்' எனப் பெண்கள் இயக்கங்கள் நீண்டநாள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், வாரம் இருமுறை இரண்டு பக்கங்கள் முழுக்க ஆபாசப் படங்களையே வெளியிட்டு - அவை நமது வீடு வரை வந்துவிடுகின்றது. இது எவ்வளவு பெரிய ஒழுக்கக் கேடு! பெண்ணிய இயக்கங்களின் பார்வை - இனி மேலாவது இது போன்ற கேடு கெட்ட பத்திரிகைகளின் பக்கம் திரும்பட்டும்.

இந்த இதழின் இதுபோன்ற தரமற்ற, ஆதாரமற்ற, நேர்மையற்ற தன்மையை மெய்ப்பிக்க - எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். எனவே, தமிழர்களின் வாழ்க்கையையே கேலிக்கூத்தாக்கிக் கொண்டிருக்கும் - இதுபோன்ற இதழ்களை எதிர்கொள்ள, தங்களின் மேலான கருத்துக்களை - ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம். ●


With best compliments from

YESTEE AGENCY

FORWARDING & CLEARING

142, K.A.C. MARKET,
WALL TAX ROAD
CHENNAI - 600 003.




படிப்பகம்

www.padippakam.com




# J.P.S. Firm

சைக்கிள்ஸ், சைக்கிள் ஸ்பேர்ஸ்
ஆட்டோ ஸ்பேர்ஸ் மற்றும் ஹார்டுவேர்ஸ்

**எங்கள் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் !!**

எங்கள் மிகப் பெரிய **புதிய ஷோரூமில்** உங்களுக்குத் தேவையான

உலகப் புகழ் பெற்ற டி.அய். சைக்கிள் நிறுவனத்தாரின் ஹெர்குலிஸ், பிலிப், பி.எஸ்.ஏ டீலக்ஸ், எஸ்.எல்.ஆர். சேம்ப், கமாண்டர், கேப்டன், ஸ்டீரீட் கேட், எம்.டி.பி. மற்றும் ஹீரோ, அட்லஸ், போன்ற சைக்கிள்கள் மற்றும் அவைகளின் ஒரிஜினல் உதிரி பாகங்கள் மிக நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்கிறோம்.

உங்கள் அன்புக் குழந்தைகள் மகிழ்ச்சியோடு விளையாட "பேபி வாக்கர், பேபி கார், பேபி டிரைசைக்கிள்கள்" பலவித வண்ணங்களில் மாடல்களில் கிடைக்கும்.

**அத்துடன்**

மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர் இவைகளின்
தரமான உதிரிபாகங்கள், கிரீஸ், ஆயில் இவைகளும்
நியாயமான விலையில் விற்பனை செய்கிறோம்.
உங்கள் தேவைக்கேற்ப தேர்ந்தெடுங்கள். ஒருமுறை
எங்கள் புதிய ஷோ ரூமிற்கு வருகை தருமாறு
அன்புடன் அழைக்கிறோம்.



என்றும் உங்கள் மேலான நல்லாதரவை நாடும் :

# J.P.S. FIRM

2/69, வேளச்சேரி மெயின் ரோடு
மேடவாக்கம், சென்னை - 601 302.
போன் : 2377182 P.P. 2377796

5/602, பழைய மகாபலிபுரம் சாலை
(சாந்தா பெயின்ட்ஸ் எதிரில்) பெருங்குடி
சென்னை - 600 096. போன் : 4961943

குறிப்பு : சைக்கிள், டிரை சைக்கிள்கள் ஓவராலிங் செய்யப்படும்.

www.padippakam.com



# ‘இந்துத்துவா’ என்ற அரசியல்

## கட்டுக்கதைகளைத் தகர்க்கும் உண்மைகள் – 3

**ஆர். ஆர். புனயானி**

கட்டுக்கதை : இந்துக்கள் சகிப்புத் தன்மை உடையவர்கள்.

உண்மை : மக்கள் சகிப்புத் தன்மையுடன் இருக்கின்றனர் என்பதற்கும், மதம் சகிப்புத் தன்மையுடன் உள்ளது என்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. மக்களிடையேகூட, அடித்தள மக்கள்தான் வெளிப்படையாகப் பேசுகின்றனர். மேல்தட்டு மக்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்றனர். இந்து மதத் தலைவர்களை எடுத்துக் கொண்டால், பார்ப்பனீயத் தத்துவத்தில் - அவர்களின்




மாறா தன்மையும், வெறும் நம்பிக்கையின்பால் ஏற்பட்ட கருத்துமே ஆதிக்கம் செலுத்துகின்றது.

முதலில், வேலைகளைப் பிரிப்பதில்கூட பார்ப்பனீயம் ஒருவருக்குக் கீழான வேலை எனவும், மற்றொருவருக்கு மேலான வேலை எனவும் பிரித்து - அதை ‘வர்ணாசிரம தர்ம’மாக்கி விட்டது. தொழிலாளர்களையே அடிப்படையில் பிரிக்கும், இதுபோன்ற குறுகிய தன்மைகளை எதிர்த்தவர்கள் மீது, இந்துக்கள் சகிப்புத் தன்மையைக் காட்டவில்லையே!.

வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படையில், சூத்திரர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த உரிமையை மீறியதற்காக - சம்புகன் என்ற சூத்திரன் தண்டிக்கப்பட்டு, கொல்லப்பட்டான், மலைவாழ் இனத்தைச் சார்ந்த ஏகலைவன், சத்திரியர்களுக்கு மட்டுமே உரிய வில் எய்தும் உரிமையைத் தானே சிறப்புடன் கற்றுக் கொண்டதற்காக - அவனுடைய கட்டை விரலைக் காணிக்கையாகக் கொடுத்தான். பெரும்பான்மை சூத்திரர்கள், பவுத்தத்தின் பால் ஈர்க்கப்பட்டதால் - பவுத்தமே கொடுங்கரம் கொண்டு அழிக்கப்பட்டது. எனவே, இந்துக்களின் சகிப்புத்தன்மை, எப்படிப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இன்றைய இந்து மதத்தின் ஒட்டு மொத்த சாரமான பார்ப்பனீய நெறிமுறைகள், குறிப்பாக மக்களிடையே சகிப்புத் தன்மையற்ற - மனிதத் தன்மையற்ற - முறையிலேயே நடந்து கொள்கின்றது. இந்தியாவிற்குள் இசுலாம் நுழைந்த போது, சாதிக் கொடுமைகளை எதிர்கொள்ள முடியாத தலித் மக்கள் இசுலாத்தைத் தழுவினர். ஆனால், உயர்சாதியினர் இசுலாத்திடமிருந்து விலகியே நின்றனர்.

பொதுவாக, அனைத்து மத தலைவர்களும் - தங்களை மிகுந்த ஆன்மீகவாதிகளாகக் காட்டிக் கொண்டு - பிற மதத்தினரிடையே சகிப்புத் தன்மையற்ற முறையிலேயே நடந்து கொள்வர். எனவே, அந்த மதத்தைச் சார்ந்த பொது மக்களும், பிற மதத்தினரிடம் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிப்பதில்லை.

கட்டுக்கதை : ‘இந்துத்துவா’ - பல்வேறு எண்ணங்களைக் கொண்ட வாழ்வியல் முறை. இது, இந்திய அரசியல் சட்டத்துடன் முரண்படுவதில்லை.

உண்மை : ‘இந்துத்துவா’ என்பது மதம் அல்ல. அது வாழ்க்கையின் ஒரு வழிமுறை - நெறிமுறை என்றால், அது பல்வேறு பரிமாணச் செயல்பாடுகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்; சமூகத்தில் எதிர்க் கருத்துக்களைக் கொண்டதாக அது இருக்கக்கூடாது.

ஜார்கண்ட்டில் உள்ள மலைவாழ் மக்களுக்கும், மும்பையில் உள்ள வியாபாரிக்கும் பொதுவானது எனக்கூற எதுவும் இல்லை. குஜராத்தில் உள்ள பண்ணையார்களுக்கும், மும்பை சேரியில் கூலி வேலை செய்யும் ஒருவருக்கும் - அல்லது பல்வேறு மாநகரங்களிலே கட்டிட வேலை செய்யும் தொழிலாளர்கட்கும் பொதுவானது என்று சொல்ல எதுவும் இல்லை. குடும்பத் தலைவிக்கும் - வணிகத்தை நிர்வகிக்கும் பெண்ணுக்கும் - விளம்பரங்களில் வரும் பெண் ‘மாடல்களுக்கும்’, பொதுவான வாழ்வியல் முறை என்று எதுவும் இல்லை.

‘இந்துத்துவா’ என்பது மதம் அல்ல. 1920-களில் தோன்றிய ஒரு அரசியல் இயக்கம். இது, கடந்த பத்து ஆண்டுகளில் நிலைப் பெற்றுள்ளது. இது, ‘இந்து ராஷ்டிரத்தை’ கட்டமைப்பதற்கான ஒரு இயக்கம். ‘இந்து தேசம்’ என்பதில் அனைத்து மக்களின் நலன்களும் பேணப்படாது. மாறாக, குறிப்பிட்ட சில இந்து உயர்சாதியினரின் நலன்கள் மட்டுமே பேணப்படும். இதில், பிற்படுத்தப்பட்ட - தலித் -



படிப்பகம்

www.padippakam.com

சிறுபான்மையினர் மற்றும் பெண்களின் நலன்கள் முற்றாக மறுக்கப்படும். இது போன்ற அமைப்பிற்குத்தான் (இந்து தேசம்) சிறுபான்மையினர் உதவியாக இருக்க வேண்டும் அவர்கள் என்று கூறுகின்றனர்.

• இந்து தேசத்தில்', பெண்கள் நல்ல தாய்மார்களாக, மனைவிகளாக, மகள்களாக மட்டுமே - மகனுக்கும், கணவருக்கும், தந்தைக்கும் இருந்து செயல்பட வேண்டும்.

• உழைக்கும் மக்கள், தங்கள் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல், 'தேசிய நலனிற்காக' உற்பத்திப் பணிகளில் முழுமையாக ஈடுபட வேண்டும்.

தலித் மக்கள், இடஒதுக்கீடு போன்ற உரிமைகளை எல்லாம் கைவிட்டுவிட வேண்டும்; அதன் மூலம், உயர்சாதியினருக்கு மட்டுமே உரித்தான 'திறமை' - 'தகுதிகளைக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் அவர்களே ஆக்கிரமித்துக் கொண்டு, - ஆதிக்கம் செலுத்த ஒடுக்கப்பட்ட மக்கள் துணைபுரிய வேண்டும்.

இவ்வாறாக, 'இந்துத்துவா' - அழுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சமூகத்தில் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட அனைவரின் வாழ்வியல் நிலைகளில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. அரசியல் இயக்கமான 'இந்துத்துவா'வின் கொள்கைகள் அனைத்தும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது. 'இந்துத்துவா'வின் இறுதி லட்சியம் - 'இந்து ராஷ்டிரம்'தான். 'இந்துராஷ்டிரம்' எனப்படும் ஒரு தேசிய அரசானாது, தனது நெறிமுறைகளை இந்து (பார்ப்பனீய) மதத்திலிருந்து பெறுகின்றது.

மக்களாட்சியை அடிப்படையாகக் கொண்டு - நாட்டின் பல்வேறு பிரிவு மக்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு - 'இந்து ராஷ்டிரம்' அடிப்படையிலேயே எதிரானது. 'அரசின் கொள்கைகளில் மதம் தலையிடாது' என்கின்றது இந்திய அரசமைப்புச் சட்டம். ஆனால், 'இந்துத்தவா'வின் லட்சியம், இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்சாதியினரின் நலன்களைப் பேணும் இந்திய அரசை ஏற்படுத்துவதுதான்!

எனவே, ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை மக்கள் 'இந்துத்துவா' என்ற முழக்கத்தின் - ஆபத்தான அரசியலைப் புரிந்து கொண்டு, இதுபோன்ற தீயசக்திகள் எந்த வடிவத்தில் வந்தாலும் அவற்றை எதிர்கொள்ள வேண்டும்.

– தொடரும்.

## சங் பரிவாரங்களின் மதவெறி முழக்கங்கள்

**"இசுலாமியர்களின் இருப்பிடம் 1. பாகிஸ்தான் 2. சுடுகாடு". "ஒவ்வொரு இந்துவின் கடமை - பசுக்களைக் கொல்பவர்களைக் கொல்வது; முதலில் கொலைக்காரர்கள் (இசுலாமியர்கள்) பிறகு கிறித்தவர்கள்".**

**"மத சார்பற்ற அரசு என்ற போலியை - 'இந்து ராஷ்டிரத்தின்' மூலம் எதிர்கொள்வதால் மட்டுமே உண்மையான சகிப்புத் தன்மை கடைப்பிடிக்கப்படும். சகிப்புத் தன்மை காப்பாற்றப்பட - இந்து அல்லாதவைகளை வெளியேற்ற வேண்டும். இந்து அல்லாதவை - சகிக்க முடியாதவை".**

**– விசுவ இந்து பரிஷத்**

# தலித் ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றி!

திருவள்ளுவர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோமஞ்சேரி கிராமத்தில், ஊருக்குப் பொதுவான கிராம தேவதை கன்னூரம்மன் கோயில் உள்ளது. பன்நெடுங்காலமாக தொடர்ந்து வந்த பாரம்பரிய உரிமையின்படி, தலித் மக்கள் இக்கோயிலில் வழிபட்டு வந்தனர். கடந்த ஆண்டு பொங்கல் திருவிழாவின்போது, வழக்கப்படி இம்மக்கள் கோயிலுக்குச் சென்றபோது – உயர்சாதி இந்துக்களால் பூசைப் பொருட்கள் பிடுங்கி வீசப்பட்டு, விரட்டி அடிக்கப்பட்டதோடு, கோயிலில் நுழைய உரிமை இல்லை என்று கூறி கடும் தாக்குதலுக்கு ஆட்பட்டனர்.

ஆதித்தமிழர் விடுதலை இயக்கத்தினர், போராட்டங்களை முன்னெடுத்ததின் விளைவாக, அரசுத் துறை அதிகாரிகள் மட்டத்தில் இருதரப்பு மக்களுக்கும் இணக்கமாக அமைதிக் கூட்டம் நடத்தி தலித் மக்களுக்குக் கோயில் மீதுள்ள உரிமையை உறுதி செய்து அரசுத்துறை ஆணையிட்டது.

இந்த அரசாணையை, அமைதிக் கூட்ட ஒப்பந்தத்தை மீறும் வகையில் – மீண்டும் இக்கோயில் தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது. 14.9.97 அன்று நடைபெறும் கோவில் விழாவிற்கு, தலித் மக்களைப் புறக்கணித்து விழா நடத்துவதென்றும், மீறிவரும் 'தலித்' மக்களை தாக்குவதென்றும் சாதி இந்துக்கள் திட்டம் தீட்டி செயல்பட்டனர்.

இத்தகவலுடன், தலித் மக்களின் உரிமைகளைக் காத்திட நடவடிக்கை வேண்டும் எனவும் – கோரி ஆதித்தமிழர் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், தமிழக அரசின் ஆதிதிராவிடர் நலத்துறை செயலர் மற்றும் ஆணையரை சந்தித்தும், பிற உயர் அலுவலர்களை சந்தித்தும் முறைமீடு செய்ததன் அடிப்படையில், மீண்டும் ஒரு அமைதிக் கூட்டம் கடந்த 6.9.97 அன்று பொன்னேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் ஆதித்தமிழர் விடுதலை இயக்க அமைப்பாளர், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலித் மக்கள் இவ்விழாவில் கலந்து கொள்ள தடை செய்யக்கூடாது எனவும், திருவிழாக் காலங்களில் அம்மன் திருவீதியுலா – சேரிக்கும் சென்று வரவேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமும், அரசாணையும் வட்ட அளவில் தனியாகப் போடப்பட்டது என்பது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இணைந்து நின்ற – தலித் மக்கள் அமைப்புகளுக்குக் கிடைத்த வெற்றி என்றால் மிகையல்ல!

– அ. வினோத்



படிப்பகம்

*With best compliments from*

**B. RAGHUNATHAN**

# MAHARA JOTHI

FORWARDING & CLEARING

No. 6, BAKER STREET, 1ST FLOOR, CHENNAI - 600 001.
PHONE : 568340, 589623
FAX : 91 - 44 - 589455, 91 - 44 - 568510
PAGER : 9610 - 104174 ; 9622 - 705291

*With Best Compliments From*

# Rainbow Engineering

*Office :*
No. 143, Brahmin Street,
Patravakkam, Ambattur
Chennai - 600 098.
Phone : 6357235

*Residence :*
57, IV Main Road
Jawahar Nagar
Chennai - 600 082.
Phone : 5379670

www.padippakam.com



# இழந்த உரிமைகளைப் பெற வழி என்ன?

## இரட்டை வாக்குரிமையின் அவசியம்

**வி.டி. ராஜ்சேகர்**

**24.9.1932** – தலித் மக்களின் உரிமைகள் பறிபோன நாள். இந்நாளில்தான், இந்தியாவின் தீண்டப்படாத மக்கள் - உயர்சாதியினரின் / ஆரியர்களின் / இந்துக்களின் அடிமைகளாக்கப்பட்டனர். இந்நாள், தலித் மக்களின் வரலாற்றில் மிகுந்த துன்பத்தையும் - வேதனையையும் ஏற்படுத்தியது. இந்நாளில்தான், நமது ரட்சகர் பாபாசாகேப் அம்பேத்கர், இந்துக்களிடம் சரணடைய - பார்ப்பனியத்தால் கட்டாயப்படுத்தப்பட்டார். இந்நாளில்தான், இந்நாட்டை "இந்து இந்தியா"வாக மாற்றுவதில் காந்தி வெற்றி கண்டார். இதில்தான், இந்துக்கள், "பெரும்பான்மை" சமூகத்தினராக்கப்பட்டனர்.

இம்முக்கிய நாளை, உயர் சாதியினர் மறந்து விடுவதை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால், இந்நாளில் ஏற்பட்ட "பூனா ஒப்பந்தத்தால்" பாதிப்பிற்குள்ளான தலித் மக்களும், இந்நாளின் வரலாற்று முக்கியத்துவத்தை மறந்துவிடுவதுதான் வேதனை அளிக்கின்றது.

பார்ப்பனிய சமூக அமைப்பின் தலைவரான, மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி, நமது மக்களுக்கு மிகப் பெரும் துரோகமிழைத்து - நம்மை நிரந்தர அடிமைகளாக்கியதுதான், இந்நாளின் வரலாற்று முக்கியத்துவம். எனவே, தலித் மக்களின் வரலாற்றில் இது ஒரு துன்பகரமான நாளாகும்.

இந்நாளில்தான், "பூனா ஒப்பந்தம்" - இந்துக்களின் "தேசம்" மற்றும் தீண்டப்படாத மக்களின் "தேசத்திற்கிடையே" கையெழுத்திடப்பட்டது. "ஒப்பந்தம்" என்பது, எப்பொழுதுமே இரு நாடுகளுக்கிடையே அல்லது போரிடும் இரு தேசங்களுக்கிடையேதான் ஏற்படும்



என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1932ஆம் ஆண்டு இந்துக்களுக்கும், தீண்டப்படாத மக்களுக்கும் இடையே ஏற்பட்ட "உடன்பாடு", இந்துக்களால் "பூனா ஒப்பந்தம்" என அழைக்கப்படுகின்றது. இதன் மூலம், இந்துக்கள் மூன்று செய்திகளை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

1. இந்தியாவின் இந்துக்கள், தீண்டப்படாத மக்கள் மீது போர் தொடுத்துள்ளனர். 2. இப்போருக்கு, ஒரு ஒப்பந்தத்தின் மூலம்தான் தீர்வு காண முடியும். 3. இவ்வொப்பந்தம், இரு "தேசத்திற்கிடையே கையெழுத்திடப்பட்டதால் இதன்மூலம் - தீண்டப்படாத மக்களுக்கென ஒரு தனித்தன்மை உண்டு அல்லது இம்மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

### "தனி வாக்காளர் தொகுதி" என்றால் என்ன?

இது இன்றைய மிக முக்கியமான - அவசியமான ஒரு திட்டமாகும். ஆனால், இதுகுறித்து தலித் மக்களிடையேகூட சரியான விவாதங்கள் நடைபெறுவதில்லை.

நமது தலித் அரசியல் தலைவர்கள் எக்கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பினும், இதில் அக்கறை செலுத்துவதில்லை. இது குறித்து அக்கறை கொண்ட ஓரிருவர், இவர்கள் சார்ந்திருக்கும் கட்சியில் உள்ள உயர்சாதியினரின் அச்சுறுத்தலால் - வெளிப்படையாக விவாதம் மேற்கொள்ளக் கூடத் தயங்குகின்றனர்.

அம்பேத்கர் அவர்கள், 1931, 1932ஆம் ஆண்டுகளில் நடந்த வட்டமேசை மாநாட்டில், 'தனி வாக்காளர் தொகுதி என்பது, தலித் மக்கள் மட்டுமே பெருமளவில் அங்கம் வகிக்கும் ஒரு தனித்தொகுதியில் - அவர்கள் விரும்பும் வேட்பாளர்களுக்கு அவர்கள் மட்டுமே வாக்களிப்பார்கள்' என்ற திட்ட வரைவை அளித்தார். தனி வாக்காளர் தொகுதி என்பது இதுதான். முதல் வட்டமேசை மாநாட்டில், அனைத்து "சிறுபான்மையினரும் இக்கோரிக்கையை முன்வைத்தனர். இம்மாநாட்டில், காந்தி சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சி பங்கேற்க மறுத்து விட்டது.

இருப்பினும், இரண்டாவது வட்டமேசை மாநாட்டில், காங்கிரசின் தலைவராக காந்தி பங்கேற்றார். தீண்டப்படாதவர்கள், இசுலாமியர்கள், சீக்கியர்களின் உண்மையான பிரதிநிதிகள் எவரும் இம்மாநாட்டில் இல்லை என்ற காரணம் காட்டி, இந்துக்களின் பிரதிநிதிகள் இக்கோரிக்கையை எதிர்த்தனர். இந்திய மக்கள் அனைவரின் ஒரே பிரதிநிதியாக காங்கிரஸ் கட்சி தன்னை அறிவித்துக் கொண்டது.

எனவே, வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்தது. இப்பிரச்சினையைத் தீர்க்க, ஒரு உடன்படிக்கைக்கு வர வேண்டும் என்பதை காந்தி உட்பட அனைவரும் ஏற்றுக் கொண்டனர் - அம்பேத்கர் தவிர. எனவே, இரண்டாவது



படிப்பகம்

www.padippakam.com

வட்டமேசை மாநாட்டுப் பேராளர்கள் "வகுப்புவாரிப் பிரச்சினை"க்குத் தீர்வுகாண முடியவில்லை.

ஆங்கிலேய பிரதமரான ராம்சே மெக்டோனால்ட் என்பவர், வகுப்புவாரிப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை 1932ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 17ஆம் நாள் அறிவித்தார். இத்தீர்வை, முதலில் காந்தி ஏற்றுக் கொண்டார். இது "வகுப்புவாரித் தீர்வு" என அழைக்கப்பட்டது. இத்தீர்ப்பின்படி, தலித் மக்களுக்கு இரு வாக்குகள் இருக்கும். பொதுத் தொகுதியில் ஒரு வாக்கு; தலித் மக்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் சிறப்புத் தொகுதியில் மற்றொரு வாக்கு.

பிறகு, காந்தியும் அவரது இந்து (ஆரியர்கள்) தலைவர்களும் வகுப்புவாரித் தீர்வை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, காந்தி பட்டினி கிடந்து உயிர் துறக்க முயற்சித்தார். "நாட்டின் தந்தையை" அம்பேத்கர் சாகவைக்க நினைக்கின்றார் என இந்துக்களின் பத்திரிகைகள், கடும் பிரச்சாரத்தை மேற்கொண்டன. அம்பேத்கரா காந்தியை பட்டினி கிடக்கச் சொன்னார்? பட்டினி கிடந்து உயிர் துறக்க முடிவு செய்தது காந்தி; ஆனால், காந்தி இந்த உண்ணா நோன்பால் உயிர்விடவில்லை. மாறாக, காந்தி ஒரு பார்ப்பனரின் குண்டுக்குத்தான் இரையானார்.

இதில், ஒன்று மட்டும் நமக்குத் தெளிவாக விளங்குகின்றது. பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஒப்புக் கொண்டதன் மூலம், காந்தியின் உயிரை அம்பேத்கர் காப்பாற்றினார். ஆனால், காந்தியோ தன்னுடைய பிடிவாதத்தால், பூனா ஒப்பந்தத்தை ஏற்கும்படி - அம்பேத்கரை கட்டாயப்படுத்தி, அதன்மூலம் அவரின் "அன்பு அரிஜனங்களின்" எதிர்காலத்தையே பாழாக்கிவிட்டார்.

இன்றுள்ள தனித்தொகுதியில், தலித் மக்கள் தங்கள் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. தலித் அல்லாத மக்கள்தான், தனித்தொகுதியில் வேட்பாளரைத் தீர்மானிக்கும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளனர். இதைத்தான் இந்துக்களின் சதித்திட்டம் என்கின்றோம்.

தனி வாக்காளர் தொகுதியில், தலித் மக்கள் மட்டுமே தலித் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க முடியும். தற்பொழுது உள்ள முறையின் மூலம், இந்துக்கள்கூட தலித் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்ய வாக்களிக்கின்றனர். இதன்மூலம் ஒரு அடிமையை தேர்ந்தெடுப்பது சாத்தியமாகின்றது.

> **"பூனா ஒப்பந்தம், தீண்டப்படாத மக்களை இந்துக்களின் நிரந்தர — ஊதியமற்ற கொத்தடிமைகளாக மாற்றிவிட்டது. காந்தி பட்டினி கிடந்தது, ஆங்கிலேயரையோ அவர்களின் ஆதிக்க ஆட்சியை எதிர்த்தோ அல்ல. அவர், இந்துக்கள்தான் எனக்கூறிய அவர் நாட்டு மக்களுக்கு எதிராகத்தான் பட்டினி கிடந்தார். காந்தியின் பட்டினிப் போராட்டத்தால், அம்பேத்கர் சரணடையவில்லை. இப்பட்டினிப் போராட்டத்தால், காந்தியின் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் — அனைத்து தலித் மக்களும் வெட்டிக் கொல்லப்படுவர் என இந்துக்கள் மிரட்டியதால்தான், அம்பேத்கர் சரணடைய நேர்ந்தது."**

தனி வாக்காளர் தொகுதி என்பது, ஏதோ புதிய கோரிக்கை அல்ல. இதுவே அம்பேத்கரின் நோக்கமும் அல்ல. ஆங்கிலேய அரசு இது குறித்து பல்வேறு ஆய்வுகளை நடத்திய பிறகே, 1932-இல் வகுப்புவாரித் தீர்வின் மூலம் இதை ஏற்றுக் கொண்டது. தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் இந்த சமூகத்தின் அடித்தளத்தில் உள்ளதால் - பொருளியல் அளவிலும், உடலளவிலும் கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்கின்றனர் என்பதும், குறைந்த எண்ணிக்கையில் உள்ள இம்மக்கள் தற்பொழுதுள்ள தனித்தொகுதி மூலம் "பெரும்பான்மை இந்துக்களின் ஆதிக்கத்தில்தான் வாழமுடியும் என்பதும் பொது அறிவுள்ள அனைவர்க்கும் விளங்கும்.

"சுதந்திரத்திற்குப்" பிறகு நடைபெற்ற பல்வேறு தேர்தல்கள் மூலம், தற்பொழுது உள்ள தனித்தொகுதி என்பது - கேலிக்குரிய ஒன்றே என்பது தெளிவாகின்றது.

அம்பேத்கர், இந்துக்களை எதிர்த்து நின்றிருக்காவிடில், நாம் இன்று இங்கு வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. இக்கட்டுரையை நான் எழுதுவதற்குக் காரணம், அம்பேத்கரின் அயராத உழைப்பும் - போராட்டமுமேயாகும்.

தலித் மக்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் உள்ளனர். ஆனால், நம் ஒட்டுமொத்த சமுதாயம் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள்தான் — நம் அனைவரையும் ஒன்றிணைக்கின்றது. ஆனால், அரசியலில் நாம் வேறுபட்டு நிற்பதற்குக் காரணம் — தற்பொழுது நடைமுறையில் உள்ள தனித்தொகுதி முறையே.

உயர்சாதியினர் நம்மை பல்வேறு பிரச்சினைகளில் பிளவுபட்டு நிற்க வைத்து விடுகின்றனர். தனித்தொகுதி முறையும் நம்மைப் பிரிப்பதற்கான ஒரு சூழ்ச்சியே. எனவே, ஒவ்வொரு ஆண்டும் 'பூனா ஒப்பந்த நாளை) நாம் நினைவு கூற வேண்டும்.

எனவே, இந்துக்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள் என ஒரு போதும் நம்பி விடாதீர்கள். இன்று எதிர்ப்புக்குரல் கொடுக்குமளவிற்காவது நம்மை - முதுகெலும்புள்ள மக்களாக மாற்றிய பாபா சாகேப் அம்பேத்கருக்கு நம் நன்றி உரித்தாகுக. நாம் அம்பேத்கரைப் போல், சிங்கங்களாக மாறினால்தான் - இழந்த உரிமைகளைப் பெற முடியும். முடிவு உங்களிடம்தான் உள்ளது. ●

**இக்கட்டுரையாளர், 'தலித் வாய்ஸ்' ஆங்கில இதழின் ஆசிரியர். தலித் இயக்கங்களின் வழிகாட்டி.**



படிப்பகம்

www.padippakam.com



# கல்வி மறுக்கப்பட்ட கொடுமை !

## முதல் தலித் தலைவரான அய்யன்காளியின் உரிமைப் போராட்டம்

டி.எச்.பி. செந்தாராசரி

தென்னிந்தியாவின் இயற்கை எழில் மிகுந்த கேரளம், பல்வேறு வகைகளில் பிற மாநிலங்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. இங்கு, நம்பூதிரி, நாயர், புலையர் என்ற முப்பெரும் சாதியே முதன்மை வகிக்கின்றது. விவேகானந்தர் 1982இல் கேரளாவிற்கு, வருகை புரிந்தபோது, அம்மக்களிடையே தீண்டாமை என்ற கொடிய பழக்கம் நிலவி வருவது கண்டு, மிகுந்த வேதனை அடைந்தார். தீண்டாமை எனும் காட்டுமிராண்டி வழக்கம், இம்மண்ணில் கடைப்பிடிக்கப் பட்டு வருவது பற்றி, அவர் 1897இல் சென்னையில் உரையாற்றும்போது, பின்வருமாறு குறிப்பிட்டார் :

***"மலபாரில் (கேரளா) நான் பார்த்ததைப் போன்று கொடுமையான வழக்கம், உலகின் வேறு எந்தப் பகுதியிலும் நான் கண்டதில்லை. சவர்ணர்கள் (உயர்சாதியினர்) நடக்கும் தெருக்களில், பறையர்கள் நடக்க முடியாது. மலபார் மக்கள் அனைவரும் மனநோயாளிகள். அவர்களின் இல்லங்கள் அனைத்தும் மனநோய் இல்லங்களே".***

சாதி-தீண்டாமைக் கொடுமைகள், உச்சகட்டத்தில் இருந்த கேரள மண்ணில்தான், முதல் தலித் தலைவரான அய்யன்காளி - 1863ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28ஆம் நாள் பிறந்தார். இப்புரட்சியாளர் சந்தித்த சாதி-தீண்டாமைக் கொடுமைகள் பற்றியும், அதை அவர் எதிர்கொண்ட விதம் பற்றியும், இன்றைய தலித் சமுதாயம் விரிவாக அறிந்து கொள்வது அவசியம்.

சாதி அடிப்படையில் மனிதனுக்குள் வேற்றுமை பார்ப்பது போன்ற சமூக ஒடுக்குமுறைகளைப் பரவலாகக் கண்ட அய்யன்காளி - சமூக அநீதிக்கு எதிராகக் கொதித்து எழுந்தார். இதுபோன்ற சமூக இழிவுகளை எவ்வாறு நீக்குவது என்று ஆலோசனை சொல்ல - வழிகாட்டக்கூட அவர் காலத்தில் எவரும் இல்லை. இதுபோன்ற கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்த முதல் மனிதர் அய்யன்காளி தான். டாக்டர் அம்பேத்கர் 1891ஆம் ஆண்டு பிறந்தபொழுது, அய்யன்காளி தீண்டாமை - சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் இருந்தார்.

அந்தக் காலகட்டத்தில், தலித் மக்கள் புது உடைகளை அணிவதுகூட குற்றமாகக் கருதப்பட்டது. எனவே, உடைகள் அழுக்காக இருப்பதுபோல் காண்பித்துக் கொள்ள - அவை சமையல் பாத்திரங்களில் உள்ள கரியால் துடைக்கப்பட்டு அழுக்குத் துணிபோல் அணிந்து கொள்ள வேண்டிய - இழிவான நிலையில் தலித் மக்கள் இருந்தனர். அய்யன்காளி, இம்மக்களிடையே சுயமரியாதை உணர்வையும், தன்னம்பிக்கையையும் ஊட்டினார்.

**அந்தக் காலகட்டத்தில், தலித் மக்கள் புது உடைகளை அணிவதுகூட குற்றமாகக் கருதப்பட்டது. எனவே, உடைகள் அழுக்காக இருப்பதுபோல் காண்பித்துக் கொள்ள - அவை சமையல் பாத்திரங்களில் உள்ள கரியால் துடைக்கப்பட்டு அழுக்குத் துணி போல் அணிந்து கொள்ள வேண்டிய - இழிவான நிலையில் தலித் மக்கள் இருந்தனர். அய்யன்காளி, இம்மக்களிடையே சுயமரியாதை உணர்வையும், தன்னம்பிக்கையையும் ஊட்டினார்.**

தலித் மக்கள் தங்களின் உரிமைகளைக் கேட்டுப் பெற - கல்வி அவசியம் என்பதை உணர்ந்திருந்த அய்யன்காளி, தலித் மக்களுக்குக் கல்வி அளிக்க - துவக்கப்பள்ளிகளைத் துவக்கினார். 1904 ஆம் ஆண்டு வெங்கனூர் என்ற இடத்தில், இவர் முதன் முதலாகத் துவக்கிய பள்ளி, முதல் நாளே உயர்சாதியினரால் தீக்கிரையாக்கப்பட்டது. இதனால், இரு தரப்பினரிடையே பெரும் மோதல்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக, தங்களின் பிறப்புரிமையைப் பெற தலித் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்தார், அய்யன்காளி!

அடிப்படை உரிமையான கல்வி முற்றிலும் மறுக்கப்பட்ட தலித் மக்கள், கிறித்தவ தொண்டு இயக்கங்களின் புதிய மதத்தைத் தழுவிக் கொண்டனர். 'மதமாற்றம்' என்று இதை அழைக்க முடியாது. ஏனெனில், தலித் மக்களுக்கு அதற்கு முன்பு மதம் என்று ஒன்றில்லை. அவர்கள் இயற்கையை வணங்கியவர்கள்; அல்லது பவுத்தர்களாக இருந்தவர்கள். தீண்டப்படாத மக்களை இந்துக்களாக, சாதி இந்துக்கள் எப்பொழுதுமே ஏற்றுக் கொண்டதில்லையே! தலித் மக்கள் இந்துக்களாக இருந்திருந்தால் - அவர்களுக்கு இந்துக் கோவில்களில் ஏன் அனுமதி மறுக்கப்படுகின்றது? அவர்கள் இந்துக்களாக இருந்தால், கோவில் நுழைவு என்ற பிரச்சினையே இருந்திருக்காதே?

தலித் மக்கள் - கிறித்துவம், இசுலாம் மற்று பவுத்தத்தைத் தழுவ - பக்தியும், நம்பிக்கையும் மட்டுமே காரணம் அல்ல. இது, தலித் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத இந்து சட்டத் திட்டங்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கையே ஆகும்.

1907ஆம் ஆண்டுக்குப் பிறகு, தலித் மக்கள் கல்வி கற்கும் சுதந்திரத்திற்கானப் போராட்டத்தை



படிப்பகம்

www.padippakam.com


மீண்டும் துவக்கினர். 1910ஆம் ஆண்டு, அரசு, பொதுப்பள்ளிக் கூடங்களில், தலித் மக்கள் கல்வி கற்கும்படி ஆணை பிறப்பித்தது. ஆனால், தனியார் பள்ளிகளில், இம்மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டே வந்தது. தலித் மக்களுக்கு கல்விச் சுதந்திரம் வேண்டும் என்ற அரசின் ஆணைக்கு எதிராக, உயர்சாதியினர் கொதித்து எழுந்தனர். 'சுதேசஅபிமானி' இதழின் ஆசிரியரான கே. ராமகிருஷ்ண பிள்ளை போன்றோர் கூட இந்த அரசாணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இவர், இந்த ஆணையை எதிர்த்து பின்வருமாறு தலையங்கம் எழுதினார் :

***"பள்ளிக் கூடத்தில் சாதி வேறுபாடின்றி, அனைத்துப் பிள்ளைகளும் ஒரே மாதிரி அமர்ந்து கல்வி கற்க வேண்டும் என்பதில் அர்த்தமே இல்லை . . . காலங்காலமாகக் கல்வி அறிவைப் பெற்று வந்த உயர்சாதி மாணவர்களுடன் – இத்துணை நாளும் வயலில் வேலை செய்து கொண்டிருந்த, கல்வி அறிவற்ற கீழ்சாதி மாணவர்களை ஒன்று சேர்த்துப் படிக்க வைப்பது என்பது, குதிரையையும், எருமையையும் ஒரே வண்டியில் பூட்டுவதற்குச் சமமாகும்."***

***– சுதேச அபிமானி, 2.3.1910***

இந்தத் தலையங்கத்தின் கருத்து, ராமகிருஷ்ண பிள்ளையின் சொந்தக் கருத்தல்ல. அவர் 'இந்தியன் ரிவியூ' (பிப்ரவரி, 1909) என்ற இதழில் வெளிவந்த கட்டுரையின் கருத்தை - அப்படியே இவரது இதழில் எழுதிவிட்டார். 'இந்தியன் ரிவியூ' இதழில், "தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாடு" என்ற தலைப்பில், இக்கட்டுரையை எழுதியவர் யார் தெரியுமா? பின்னாளில் இந்திய தேசிய காங்கிரசின் தலைவரான திருமதி. அன்னிபெசன்ட் அம்மையார்தான் இதை எழுதினார்.

அரசின் ஆணைக்குப்பிறகும் தலித் மக்களுக்கு, பள்ளிகளில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து, தங்களின் உயிரைப் பணயம் வைத்து - தலித் மக்கள் தங்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்று அய்யன்காளி வலியுறுத்தினார். இதன் விளைவாக, நாட்டின் பல பகுதிகளிலும் தலித் மக்கள் தங்களின் உரிமையை நிலை நாட்ட - வலுக்கட்டாயமாக பள்ளிகளில் நுழைந்தனர். இதன்மூலம் பெரும் பிரச்சினை ஏற்பட்டது.



அய்யன்காளி
*(1863 – 1941)*

ஒருட்டம்பாளம் என்ற இடத்தில் உள்ள பள்ளியில், அய்யன்காளியே - பஞ்சமி என்ற சிறுமியுடன் நுழைந்தார். இதனால் பெரும் மோதல்கள் ஏற்பட்டன. இது ஏழு நாட்கள் தொடர்ந்தது. இறுதியில், உயர்சாதியினர் அப்பள்ளியையே தீக்கிரையாக்கினர். இது, பல்வேறு பகுதிகளில் பெரும்போராட்டத்தை ஏற்படுத்தியது. சொத்துக்கள் சூறையாடப்பட்டு, பலர் உயிரிழந்தனர்.

அதற்குப் பிறகு நடைபெற்ற பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு, தலித் மக்களின் கோரிக்கைகளை எடுத்துரைக்க, அய்யன்காளி 1911ஆம் ஆண்டு - சட்டமன்றத்திற்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அய்யன்காளி, சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதைப் பற்றி ஒரு வரலாற்றாசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டார் :

***"புகழ்பெற்ற இந்த சட்டப் பேரவையில், ஒரு புலையன் (தலித்) அம்மக்களின் பிரதிநிதியாக அமர்ந்துள்ளார். நாட்டில் பரவலாக ஏற்பட்டுள்ள மாற்றம் எனும் தீப்பொறி ஒன்றிணைந்து – பெருந்தீ எழுவதன் மூலம் – பழமை பற்றி எரிந்து சாம்பலாகட்டும். அப்பொழுதுதான், புலையர்கள், உயர்சாதியினர் என அழைக்கப்படுவோருடன் சரிசமமாக அமரும் சூழல் வரும். புலையர்கள் தங்களின் உரிமைகளை நிலைநாட்ட, மாநாடுகளை நடத்தத் துவங்கி விட்டனர். இது ஒரு மகிழ்ச்சியான – நல்ல துவக்கத்திற்கான அறிகுறி".***

— தொடரும்.

## தலித் மீதான வன்முறை

**பஞ்சாப் மாநிலத்தில், ஒரு தலித் பெண்ணை, நிர்வாணமாக்கி சாலையில் நடக்கச் செய்துள்ளனர். அர்தீப் சிங், மங்கள் சிங் மற்றும் சுவான் சிங் ஆகியோர் – 14 வயது தலித் பெண் ஒருவரை 24.8.97 அன்று கடத்திச் சென்றுள்ளனர். பின்னர் – அப்பெண்ணை நிர்வாண நிலையில் மீண்டும் வீட்டுக்குச் செல்லுமாறு, கட்டாயப்படுத்தியுள்ளனர். இப்பெண்ணின் பெற்றோர் செய்த புகாரின்பேரில், அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். •**

**– 'தினமணி', 26.8.97**



படிப்பகம்

www.padippakam.com



# "தலித் முரசின் தரம் நிரந்தரம்"

◆ 'பத்தோடு பதினொன்று; அத்தோடு இது ஒன்று' என்ற அளவில் இல்லாமல், தலித் மக்கள் உட்பட ஒடுக்கப்படும் பிற மக்களுக்காகவும் - மனித நேயத்திற்காகவும் குரல் கொடுப்பதாக அமைந்துள்ளது - தலித் முரசு.

'தமிழ் நீரோட்டத்தின் எதிரிகள்' - நூல் அறிமுகம் நன்று. பகவதி தேவி அவர்களின், அனைத்துப் பெண்களும் சமமாக உள்ளனரா?' கட்டுரை, சீதையை சீருயர்த்தும் இந்நாட்டின் மனசாட்சியைக் குலுக்குகின்றது. மேல்சாதி வெறியர்களின் வாளுக்கு விடை சொல்லும் தலித் மக்கள் - இன்று பார்ப்பன, பனியாக்களின் பேனாவிலிருந்து கசியும் மசியின் நிறத்தை அடையாளம் காட்டி வருவது ('மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் இதழ்கள்' - தொடர்) அருமை! மொத்தத்தில் 'தலித் முரசு' நன்றாகவே முரசரைகின்றது!

– மு. குலாம் முகம்மது, ஆசிரியர், 'விடியல் வெள்ளி', சென்னை – 3.

◆ தலித் முரசின் தரம் நிரந்தரமாக்கப்பட்டு வருகின்றது. 'சுதந்திர நாள்' - 1947, 1972, 1997 எதுவாக இருந்தாலும் அய்யா பெரியாரின் கருத்து, என்றைக்கும் பொருந்துவதாகவே உள்ளது. 'எதற்காகப் பொன்விழாக் கொண்டாட்டங்கள்' - ரவிக்குமாரின் சீற்றம், சிந்தனை வளத்தை வெளிப்படுத்துகின்றது; இந்நாட்டின் உண்மை நிலையும் தெளிவாகின்றது.

– பி. தளபதி, நெய்வேலி.

◆ 'வட மாவட்டங்களிலும் தலித் மக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன' நேரடித் தகவல்கள் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். நமது 21ஆம் நூற்றாண்டுப் பயணம் - முன்னோக்கி அல்ல; பின்னோக்கிச் செல்கின்றது. பெரியார் நூல் அறிமுக விமர்சனம் - துல்லிய படப்பிடிப்பு. ஒன்பது தீர்மானங்களையும் கவிதை வழி நிறைவேற்றிய கவிஞர். பிரபுவின் கருத்துக்களில் முழு நியாயம் இருக்கின்றது.

– தி.மா. சரவணன், திருச்சி.

◆ அய்ந்தறிவுள்ள நாய்களும், பன்றிகளும் நடந்து செல்லும் பாதையில் - நாங்கள் நடந்தால் நடைபாதை தீட்டாகிவிடுமா? கேணியில் நீர் எடுத்தால், கேணி கெட்டுவிடுமா?, கேடு கெட்ட எத்தர்களே! இனியும் இந்த இழிவு நிலை தொடர்ந்தால் . . . நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம்; பொங்கி எழுவோம்.

– திராவிடச் சுடர், செல்லங்குப்பம்.

◆ தலித் முரசில் உணர்வூட்டும் கருத்துக்கள், எழுச்சியூட்டும் எண்ணங்கள் பல! வளர்க . . .

– புலவர். மு.சு.தங்கவேலனார், வாணியம்பாடி

◆ 'தலித் முரசு' - வெறும் செய்திகள் அல்ல. சேகரித்து வைக்க வேண்டிய பெட்டகம்; வரலாற்று உண்மைகள், பக்கத்திற்குப் பக்கம் உணர்வுகளைக் கொண்ட வாசகங்கள். எனினும், இவற்றை வெறும் இனிப்பாக எடுத்துக் கொள்வோருக்கு - சற்றுக் காரம் தேவை. காரமாக எடுத்துக் கொள்வோருக்கு - சற்று இனிப்புத் தேவை!

– இந்திரா முனுசாமி, சென்னை – 34.

◆ தலித் முரசின், கட்டுரைகள் - கவிதைகள் மற்றும் வடிவமைப்பும் அழகாகவும், தெளிவாகவும் உள்ளன. தலையங்கம் முதல் இறுதி வரை இதழ் சரியான வழியில் செல்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது. 'தீர்மானங்கள்' கவிதையில், ஒரு தலித் படிக்கப் பட்டப்பாடுகளைக் கூறி - 'பற ஆபிசரு வர்றான்' என்ற பியூனின் வார்த்தைகளோடு முடிந்த கவிதை - உணர்வைத் தொட்டது!

– சந்திரசேகரன், சென்னை – 71.

◆ தலித் மக்களின் அரசியல் இதழாக 'தலித் முரசு' உருப்பெற்று வருவதும், சரியான கால இடைவெளிகளில் - தொடர்ச்சியாக வருவதும் மகிழ்ச்சியளிக்கின்றது. இதனைத் தொடர்வீர்கள் என நம்புகின்றேன்.

– பேரா. அ. மார்க்ஸ், தஞ்சை

## ஆஸ்திரேலியாவில் 'தலித் முரசு'

தமிழக தலித் மக்களின் உரிமைகளையும், போராட்டங்களையும் பறைசாற்ற – 'தலித் முரசு' வெளிவருவது கண்டு மகிழ்வுற்றேன். இந்தியாவின் பல்வேறு மொழி பேசும், தலித் மக்களின் போராட்ட நெறிமுறைகளுக்குப் புரட்சியாளர் அம்பேத்கரின் நூல்களிலிருந்துதான் வழிமுறை, உந்துதல் கிடைக்கின்றது.

'தலித் முரசு', தலித் மக்களின் அவல நிலையை சரிவர ஆய்வு செய்து – உண்மையை உரைக்கும் என நம்புகின்றேன். எனக்குத் தொடர்ந்து 'தலித் முரசு' அனுப்புங்கள். எனக்கு இந்தி, பெங்காலி படிக்கத் தெரியும். நான் உங்களுக்கு ஆஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் பற்றி கட்டுரை அனுப்புகின்றேன். மேற்கு வங்கத்தில் உள்ள தலித் மக்களின் வரலாறு பற்றியும் உங்களுக்குத் தொடர் கட்டுரைகளை அனுப்புகின்றேன். தலித் முரசில் வெளியிடுங்கள்.

இதன் மூலம் நான் 'தலித் முரசின்' ஆஸ்திரேலிய செய்தியாளராகச் செயல்படுவேன். 'தலித் முரசு' எதிர்காலத்தில் செழித்தோங்க வாழ்த்துக்கள்!

– டாக்டர். டென்னிஸ் வாக்கர், மெல்பர்ன், ஆஸ்திரேலியா.



படிப்பகம்

www.padippakam.com



# "அனைவருக்கும் சமூகநீதி - சமத்துவம் கிடைத்தால்தான் நாடு முன்னேறும்"

ராம்விலாஸ் பாஸ்வான்

வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றபிறகும் நாடு முன்னேறவில்லை, தொடர்ந்து பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது. நீண்டகால அடிப்படையில் - திட்டமிட்டு நடவடிக்கை எடுக்க, தலைவர்கள் தவறிவிட்டதால்தான் நாடு, பொருளாதாரரீதியில் பின்தங்கியும் சமூகப் பதற்றம் மிகுந்தும் காணப்படுகின்றது.

சாதிய முறையால், நாட்டின் வளர்ச்சிப் பணிகள் சீர்குலைந்தன. தொழிலாளர்களுக்கு உரிய சமூக நிலை கிடைக்கவில்லை. நாட்டின் வளர்ச்சிக்கான அடித்தளக் கட்டமைப்புத் துறைகள் வளர்ச்சியே அடையவில்லை. ஆங்கிலேய அரசு இந்த நாட்டின் அடித்தளக் கட்டமைப்பை மேம்படுத்த எடுத்த நடவடிக்கைகளைக் கூட, அடுத்து வந்த காங்கிரஸ் அரசு எடுக்கவில்லை. அது ஏன் என்று புரியவில்லை. ரயில்வே துறையில் இந்த நிலைமை தெளிவாகத் தெரிகின்றது.

●●

**விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற பிற தலைவர்களின் பங்களிப்பைவிட, எந்த விதத்திலும் குறையாத அளவுக்குப் பங்காற்றிய - மகாத்மா ஜோதி பாபூலே, பாபா சாகேப் அம்பேத்கர், தந்தை பெரியார், ஆகியோரின் நினைவைப் போற்ற மறந்தது ஏன் - இருட்டடிப்புச் செய்தது ஏன்?**

●●

அனைவருக்கும் சமூக நீதி கிடைக்க, அரசும் நாடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவருக்கும் சமூக நீதியும் - சமத்துவமும் கிடைத்தால்தான் நாடு முன்னேறும். முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களிலேயே பின் தங்கியவர்களுக்கும் சேர்த்துத்தான் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டின் பின்தங்கிய நிலையைப் போக்க, இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. சங்மா விடுத்த அழைப்பு சரியானது. நாட்டுக்கு சுதந்திரம் வேண்டும் என்று காந்தி விரும்பியது ஏற்கக் கூடியதே. நாடு சுதந்திரம் அடைந்தாலும் தலித் மக்களின் நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிடாது என்று அம்பேத்கர் அச்சப்பட்டபடியே நடந்துவிட்டது.



'இந்து ராஷ்டிரம்' தேவை என்று முழங்கும் அரசியல் கட்சிகள் ஒன்றை மறந்து விடுகின்றன. நாட்டின் அனைத்துப் பகுதி மக்களும் அனைத்துத் தரப்பு மக்களும் இந்த நாட்டின் நலனுக்காக உழைத்துள்ளனர், உழைத்தும் வருகின்றனர். ஊழலையும் பிற சமூகத் தீமைகளையும் களைய, அரசு போராடி வருகின்றது. இந்தத் தீமைகள் எல்லாம் சேர்ந்து, சமூகத்தில் சமத்துவம் ஏற்படாமல் மக்களை வாட்டி வதைக்கின்றன. ஊழலுக்கு எதிரான முயற்சி வெற்றி பெற, அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு தர வேண்டும்.

இந்தியாவின் சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம். விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட பல தலைவர்களைப் பற்றி எல்லாம் நினைவு கூர்ந்து பேசப்படுகின்றது. அதே நேரத்தில், அத்தகைய தலைவர்களின் பங்களிப்பை விட எந்த விதத்திலும் குறையாத அளவுக்குப் பங்காற்றிய மகாத்மா ஜோதி பாபூலே, பாபா சாகேப் அம்பேத்கர், தந்தை பெரியார், ஆகியோரின் நினைவைப் போற்ற மறந்தது ஏன் - இருட்டடிப்புச் செய்தது ஏன்? அவர்கள் விரும்பிய விடுதலை என்பது, சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களும் கவுரவத்துடன் வாழும் உரிமையைப் பெற வேண்டும் என்பது, ஒரு படி மேலானதாகும். ●

*மய்ய ரயில்வே அமைச்சர் 29.8.97 அன்று, நாடாளுமன்ற பொன்விழா சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றியதிலிருந்து. இதன் முழு உரை பின்னர் வெளியிடப்படும்.*



படிப்பகம்

www.padippakam.com



# தீண்டாமையை ஒழிக்க எளிய வழிமுறை என்ன?




இந்து மதம் என்றால் மண்ணாங்கட்டி அல்ல – உடைத்துத் தூள் ஆக்கிவிடுவதற்கு; அது, உங்கள் வாழ்நாளில் மட்டுமல்ல; உங்கள் பேரன் காலத்திலும் முடியுமா என்று கருதக்கூடியதுமல்ல. அது (இந்து மதம்) உங்களுடைய சொத்துமல்ல. நீங்கள் தேவையின்றி உங்களுடையது என்று கூறிக் கொண்டு துன்பப்படுகின்றீர்கள். இந்து மதத்தில் உங்களுக்கு இடம் இல்லை. அப்படி எனில், வேறு என்ன செய்வது என்று கேட்பீர்கள். சொல்லுகின்றேன் : அதற்குப் பதில் என்னவென்றால், இந்து மதத்தை விட்டு நீங்கள் ஒழியுங்கள் என்பதுதான்.

அப்படி ஒழிந்து விட்டால், இந்து மதம் ஒழிந்து விடுமா? தீண்டாமை ஒழிந்துவிடுமா? என்று கேட்பீர்கள். நீங்கள் அதிலிருந்து ஒழிந்த பின்பு அது இருந்தால் என்ன? ஒழிந்தால் என்ன? அதில் தீண்டாமை இருந்தால் என்ன? தொலைந்தால் என்ன? உங்களுக்கு ஏன் அந்தக் கவலை? என்று கேட்கின்றேன். இந்து மதத்தில் இருந்து விலகி விட்டால், தீண்டாமை போய்விடுமா? என்று கேட்பீர்கள்.

அதற்கு எனது பதில் : எந்த மதத்தில் தீண்டாமை இல்லையோ – அந்த மதத்தில் சேர்ந்து விட்டதாகச் சொல்லுங்கள். அப்புறம் எவன் உங்களைத் தீண்டாதவன் என்று சொல்லுவான்? மதம் இல்லாதவனுக்கும் தீண்டாமை உண்டு. வேறு மதத்தில் சேர்ந்தவனுக்குத்தான் தீண்டாமை இல்லை. அவ்வளவு எளிதில் தீண்டாமை ஒழிப்பு இருக்க, தீண்டாமை ஒழிய – இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்றால், யோசனை அற்றதும், இயலாத செயலுமாகும். இந்து மதம் என்று ஒன்று இல்லை. இருப்பதாகக் காட்டிக் கொள்வதை எளிதில் ஒழிக்க முடியாது.

எனவே, உங்களுக்குக் குறுக்கு வழி – இந்து மதத்தில் இருந்து நீங்கள் விலகிவிடுங்கள். இதுதான் எளிதான செயல். உங்களைப் பொறுத்த வரையில், நான் இதை 20 ஆண்டுகளாகக் கூறி வருகின்றேன். இப்பொழுதும் ஆண்டுக்கு, சுமார் 1000, 2000 பேர்களுக்கு மேலாகவே – நம் நாட்டில் கிறிந்தவர்களாகவும், இசுலாமியர்களாகவும் ஆகிவருகின்றனர். கிறித்துவத்தில் சேர்ந்தவர்கள் நிலை எப்படி இருந்தாலும், இஸ்லாத்தில் சேர்ந்தவர்களுக்குத் தீண்டாமையும் – சூத்திரப்பட்டமும் பஞ்சாய்ப் பறந்து விட்டதை நான் பார்க்கின்றேன்.

நான் இவைகளை, அதாவது நீங்கள் இஸ்லாமாகக் கருதும்படி நடந்து கொள்ளுங்கள் என்பதை – உங்கள் ஆத்மார்த்தத்திற்கோ, மோட்சத்திற்கோ சொல்ல வரவில்லை. அதற்கு இந்து மதமே போதும். எவ்வளவு பெரிய பாவமானாலும் எளிதாகத் தீர்த்துவிட இந்து மதத்தில்தான் வழி இருக்கின்றது. எனவே, பாவமன்னிப்புக்கு என நான் சொல்ல வரவில்லை. உங்கள் இழிவு நீங்கிச் சுயமரியாதை ஏற்பட்டு – மான வாழ்வு ஏற்படவும் – போதுமான ஆதரவு இருந்து உங்கள் பலவீனம் எல்லாம் ஒழியவும்தான் நான் இதைச் சொல்லுகின்றேன்.

இந்து மதம் உங்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு, உங்கள் மானத்தை வாங்குகின்றது. அதற்குக் காந்தியார் பிரச்சாரம், பார்ப்பனர் தொண்டு, முட்டாள்களின் பணம், தமிழ் மடாதிபதிகள், தமிழ் கோடீசுவரர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ்க்கலை ரசிகர்கள், நாடகக்காரர்கள், சினிமாகாரர்கள், பாட்டு வித்வான்கள் போன்றோர்களின் நீர்ப்பாய்ச்சல் என்னும் ஆதரவும் – தாராளமாய் வற்றாத கடலாய் அதற்கு இருந்து வருகின்றது.

எனவே, இந்து மதத்தைத்தான் மானமுள்ள ஆதிதிராவிடனும், தமிழனும் வெறுத்து அதிலிருந்து விலக வேண்டுமே ஒழிய – அதைவிட்டு இசுலாம் மதத்தைப் பற்றியோ, வேறு மதத்தைப் பற்றியோ வெறுத்துப் பேசுவது மதியற்றதும், மான உணர்ச்சியற்றதுமாகும்.


*– 20.6.1943 அன்று 'தீண்டாமை ஒழிப்பு நாள்' விழாவில் ஆற்றிய உரை*



படிப்பகம்

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No. : TN/MS(S) / 768 / 97, RDIS No. 1217 / 97 - E




*Edited and Published by* **P. Chandragesan** on behalf of **Dalit Sena,** Tamil Nadu, No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078. Printed at Thamizhmarai Achagam, Chennai - 600 083.

படிப்பகம்